
# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 35 | மே, 9, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

யாழ்-வாலிபர் பெரும்படை வீரநடை போட்டுவேகமாகமுன்னேறுகின்றது.

# 21 கோரிக்கைகளை எதிர்க்கும் துரோகிகள்

## பொய் பேசுவதில் போட்டா போட்டி

## வெற்றி எமதே

**தொழிலாள வர்க்கத்தின் பொதுக் கோரிக்கைகளான 21 ஐயும் அரசாங்கத்துக்கும் முதலாளிமார்களுக்கும் சமர்ப்பிப்பது, சென்ற புதன்கிழமை நடைபெற்ற கூட்டுத் தொழிற்சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் மீண்டும் பின் போடப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் 6-ம் திகதி திரும்பவும் நடைபெறும்.**

21 கோரிக்கைகளையும் சமர்ப்பிப்பது ஒரு புறமிருக்க, அந்நிலைமையைப் பற்றி விவாதிப்பது கூட, மூன்று மணி நேரம் நடைபெற்ற இக் கூட்டத்தில் முடியாதிருந்தது. இதற்குக் காரணம் இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சார்ந்த சங்கப் பிரதிநிதிகள் விளக்கம் எதுவும் கூறுது விவாதத்தை எதிர்த்ததேயாகும். கூட்டுக் கமிட்டியில் உள்ள மற்றச் சங்கங்கள் நிலைமையினை விவாதித்தல் வேண்டும் எனக் கோரின.

கூட்டரசாங்கம் அமைக்கப்படும்வரை கோரிக்கைகள் பற்றி நடவடிக்கை எடுப்பதை முன்னணித் தலைவர்கள் விரும்பாததே இவ் வெதிர்ப்புக்குக் காரணமாகும். தங்களது சுயநல நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தொழிலாளரின், பொது மக்களின் நலன்களை நாசம் செய்ய இத் தலைவர்கள் தயாரென்று இதிலிருந்து தெளிவாகின்றது.

இதனிடையில் கூட்டரசாங்கம் ஏற்படுமா? இல்லையா? என்னும் பிரச்சினை எழுகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் கூட்டரசாங்கப் பேச்சுப் பெரும் குழறுபடியை உண்டாக்கியுள்ளது. முன் செல்ல முடியாத ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், கொள்கைகளைக் கைவிட்ட இடதுசாரியினரும் ஏற்படுத்தும் கூட்டரசாங்கம் இலங்கைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லாது என்பது உறுதி.

கூட்டரசாங்கம் ஏற்படுவதாயிருந்தாலும் திரு. பிலிப் குணவர்த்தனவிற்கு அங்கு இடமிருக்காது என்பது அவருக்கும் பிரதம மந்திரிக்கும் அண்மையில் ஏற்பட்டுள்ள 'யார் பொய் பேசியது' என்ற போட்டியின்மூலம் பட்டவர்த்தனமாகத் தெரிகின்றது.

மறுபக்கத்தில் பிலிப்பையும், முன்னணியையும் ஒரு புறத்தில் ஒதுக்கிவிட்டு மந்திரி சபைக்குள் பாய்வதற்கு என். எம். பெரேரா கும்பல் முயற்சி எடுப்பதாகத் தெரியவருகின்றது. மந்திரிப்பதவி இன்றிக்கூட அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்கக் கெனமன்-விக்கிரமசிங்கா கும்பல் எப்பொழுதும் ஆயத்தம் என்பது சொல்லத்தேவையில்லை.

இந்நேரத்தில், 'தவச' பத்திரிகையில் வெளிவந்த 'என். என். பெரேராவின் இரகசிய சாசனம்' நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 'தவச' பத்திரிகை பொய் புனைவதில் திறமை மிகுந்ததானலும் என். எம். பெரேரா இத்தகைய கடிதம் தான் எழுதவில்லை என்று மறுத்துரைக்கவில்லை.

எது எப்படியிருந்த பொழுதும் இக் கடிதத்தில் காணப்படும் கருத்துக்கள் அவரும் அவர் நண்பர்களும் தற்பொழுது கொண்டுள்ள கருத்துக்கள் என்பதில் சந்தேகமில்லை.

உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்காகப் போராடும் நமக்கு ஒன்று தெளிவு. கூட்டரசாங்கம் ஏற்பட்டாலும் ஏற்படா விட்டாலும், தலைவர்கள் காட்டிக்கொடுத்தாலும் காட்டிக் கொடுக்காவிட்டாலும் மக்கள் போராட்டம் தொடரும். 21 கோரிக்கைப் போராட்டத்தை முறியடிக்க எத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அக் கோரிக்கைகளை நாம் வெல்வதை எவருமே தடுக்க முடியாது.

### யாழ். மேதின ஊர்வலம்

| | |
|---|---|
| கம்யூனிஸ்ட் | 9 நிமிடம் |
| தமிழரசுக்கட்சி | 4 நிமிடம் |
| இடதுசாரி முன்னணி | 3 நிமிடம் |




புரட்சிகர அணிகளின் கூட்டு ஊர்வலத்தின் தலைமையில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் வரும் காட்சி.

## தலையங்கம்

### மக்கள் சக்தி

சரித்திரத்தை நிர்ணயிப்பவர்கள் தலைவர்களல்ல பொதுமக்கள் தாம் என்பதை இவ்வருட மே தினம் நிரூபித்தது. ''தலைவர்கள் விக்கிரமசிங்கா, கெனமன், மெண்டிஸ் ஆகியவர்ர்கள் இல்லாது உங்களால் என்ன செய்ய முடியும்'' என்று இதுகாலவரை வினவெழுப்பிய எதிரிகளும் ஏன் சில நண்பர்களும் கூட எமது மே தின ஊர்வலத்தைக் கண்டதும் தமது கருத்தை மாற்ற நேரிட்டுள்ளது!

தலைவர்கள் புரட்சிகர அபிலாஷைகளுக்குத் தலைமையளித்துப் போராடும் வரையே அவர்களுக்குச் செல்வாக்கிருக்கும். இதை விடுத்துத் தலைவர்கள் தமது கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டால் மக்கள் தமது போராட்டங்களைத் தாங்களாகவே நடத்துவர். அல்லது அதற்குத் துணை புரியும் முறையில் புதிய தலைமை காண்பர். இவ் வருட மே தினத்தில் நாம் இதைத்தான் கண்டோம்.

பிரசித்தி பெற்ற தலைவர்களாகப் பவனி வருபவர்கள் எத்தகைய சீர்குலைவு வேலைகளில் ஈடுபட்டாலும், அவதூறுகளைப் பொழிந்தாலும், பழய ரெக்காட்டுகளைப் போட்டாலும் பொது மக்கள் எமது சரியான நேர்மையான பாதையைப் புரிந்து ஏற்றுக்கொள்கின்றனர் என்பது நாளுக்கு நாள் தெரிய வருகின்றது.

வஞ்சனையும், பொய்யும் சந்தர்ப்பவாதமும், சுயநலமும் நீண்ட காலம் வாழ முடியாது.

நேர்மையும், உண்மையும் உறுதியும், தியாகமும் நிச்சயம் வெற்றி பெறும்.

# யாழ்நகரில் பிரமாண்ட மேதினம்

என்றுமே கண்டிராதளவில் யாழ்ப்பாணம் இந்த ஆண்டு பிரமாண்ட மேதின ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் கண்டு இதயம் பூரித்தது. இடதுசாரி ஐக்கிய முன்னணிஎன்றபோலிப் போர்வையில் திரிபுவாதிகளும் சீர்திருத்தவாதிகளும், வகுப்வாத அடிப்பு படையில் தமிழரசுக் கட்சியும் கோடிசுவரனின் லேபலை ஒட்டி மக்களை ஏமாற்ற முயன்றதும், படுதோல்வி அடைந்ததை யாழ்ப்பாண மக்கள் 'நெற்றிக்கு நேர்' கண்டுகொண்டனர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம் ஆகியவவற்றின் யாழ். பிரதேசக் கிளைகள் மாபெரும் ஊர்வலத்தையும்பொதுக்கூட்டத்தையும் நடத்தி இருக்கின்றனர்.

ஊர்வலத்தில் பெரும்பான்மையாகத் தொழிலாளர்களும் விவசாயிகளும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

செஞ்சட்டை அணிந்து இராணுவ மிடுக்குடன், இளமைத் துடிப்புடைய யாழ்ப்பாண வாலிபர் செம்படைஅணி வகுத்து வீதிவலம் வந்தது.

ஊர்வல முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் சந்தியாகுபிள்ளை தலைமைவகித்தார்.

தோழர்கள் எஸ். இராஜா எஸ். கதிரவேலு, பழனியாண்டி, வீ. ஏ. கந்தசாமி, சிறிசேன, அந்தனி சில், ஆர். பொன்னையா, என். இராமநாதன், டாக்டர் சீனிவாசகம் இன்னும் பலர் கூட்டத்தில் பேசினர்.

## பதுளையில் புதிய பாதை காட்டும் வாலிபர் கருத்தரங்கம்

அநுராதபுரியில் நடைபெற்றது போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததோர் கருத்தரங்க மாநாடு பதுளை விசாகா வித்தியாலய மண்டபத்தில் இம் மாதம் 15, 16, 17-ம் திகதிகளில் நடைபெறும். ஈழத்தின் சகல பகுதிகளிலிருந்தும், வாலிபர் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட ஐந்து ஐந்து பிரதிநிதிகள் இக் கருத்தரங்கத்தில் கலந்து கொள்வர்.

ஈழத்தில் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து வீரமிக்க போராட்டம் நடத்திய சுதந்திரத் தளமாகிய ஊவாப் பிரதேசத்திலுள்ள பதுளையில் நடைபெறும் இம் மாநாடு எமது நாட்டு முற்போக்கு வாலிபர்களுக்கு மாக்சிஸ போதமளித்து, புரட்சிகர வழிக்கான சரியான பாதையைக் காட்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

தொழிலாளி

# சட சடவெனச் சரிகின்றது காலனி முறை

## விடுதலை யுத்தங்களை எதிர்க்கும் திரிபுவாதிகள்

முதலாவது உலக யுத்தத்திற்குப் பின் காலனி, அரைக்காலனி நாடுகளில் வெடித்தெழுந்த புரட்சிகள் ஏகாதிபத்திய வாதிகளினதும் அவர்கள் அடிவருடிகளினது அடக்குமுறையினால் பெரும் நஷ்டங்களுக்குள்ளாயின. ஆனால் 2வது உலக யுத்தத்திற்குப் பின் தேசிய விடுதலை யுத்தத்தின் சுவாலையை அவர்களால் அணைக்க முடியவில்லை. எனவே காலனிஸ அமைப்பு முறை அடித்தளம் வரையில் ஆட்டம் கண்டு சட சட என்று தகர்ந்து விழத் தொடங்கியது. இதுவரையில் 170 கோடி மக்களைக் கொண்ட 50க்கு மேற்பட்ட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் காலனி அடிமைத் தளையினின்றும் விடுபட்டன. அவற்றில் சீனு, வட-வியட்நாம், வட-கொரியா, கியூபா ஆகியவை சோஸலிஸப் பாதையை மேற்கொண்டன. இதர நாடுகளிலும் தேசிய விடுதலைப் புரட்சி சூறுவளி போலச் சுழன்றடிக்கத் தொடங்கிற்று. எனவே ஏகாதிபத்திய காலனிஸ வாதிகள் தமது தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் மாற்ற ஆரம்பித்தார்கள். காலனி நாடுகளுக்கு நல்லவர்கள் போல நடித்து, சீர் திருத்தங்கள் பலவற்றைச் செய்து, தமது நலன்களைப் பேண முயன்ருர்கள்.

### நவீன காலனி முறை

என்ருலும், அவர்களுடைய இயல்பு மாறவில்லை. தமது சுரண்டலைத் தொடர்ந்து நீடிக்க, பழைய காலனிஸக் கொள்கையைக் கைவிட்டு புதிய காலனிக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். தாம் நேரடியாக ஆட்சி செய்வதை விட்டு, காலனி நாடுகளைத் தமது நலன்களை ஊறு படுத்தாத பூர்ஷுவா வர்க்கங்களிடம் ஒப்படைத்து தமது சுரண்டலை நடத்தினர்கள். உதாரணமாக இந்தியாவை பெரு நிலப் பிரபுக்கள், பெரு முதலாளிகளின் பிரதிநிதியான நேருவிடமும், இலங்கையை யூ.என்.பி. யிடமும் ஒப்படைத்தார்கள். இன்னும் சில இடங்களில் பெயரளவுக்குச் சுதந்திரம் கொடுத்து தமது பொம்மை ஆட்சிகளை ஆங்காங்கு நிறுவினர்கள். வேறு விடுதலை பெற்றிருந்த நாடுகளை இராணுவக்கூட்டணிகளில் சிறப்பாக சியாட்டோ, சென்டோ, நேட்டோ, அன்ஸஸ் முதலியவைகளில் சேர்த்து அடிமைப் படுத்தினர்கள். அந்த நாடுகளில் இராணுவத் தளங்களை அமைத்து அவற்றின் சுதந்திரத்துக்கு குந்தகம் விளைவித்தார்கள்.


ஒரு சில நாடுகளை ஒன்று சேர்த்து சமஷ்டி அரசுகளாக இணைத்து, அவற்றை தமது கட்டுப்பாட்டில் மேலும் வைத்துக்கொள்ள முயல்கிருர்கள். இவற்றுக்குப் பிரிட்டிஷாரின் காலனிஸப் படைப்பான மலேஷியாவும், தெற்கு அராபிய சமஷ்டியும் சிறந்த உதாரணங்களாகத் திகழ்கின்றன. ''உதவிகள்'' என்பவற்றை அரசியல், பொருளாதார நிபந்தனைகளுடன் கொடுத்து அந் நாடுகளின் செல்வாதாரங்களைச் சுரண்டி வருகின்ருர்கள். இன்னும் ஐ. நா. வைக் கருவியாக்கி பல நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டு, அங்கெல்லாம் இராணுவ, பொருளாதார, கலாசார ஆக்கிரமிப்புகளை நடத்துகின்ருர்கள்.

இவை பற்றி அதிகம் கூருமல் ஹவனு பிரகடனம் புதிய காலனிஸம் பற்றிக் கூறுவதைக் கேட்டால், அதன் விஸ்வரூபத்தை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடியும்.

''லத்தீன் அமெரிக்கா, ஸ்பானிய காலனி சாம்ராஜ்ஜியத்தைவிட மிகக் கொடிய பலம் வாய்ந்த ஏகாதிபத்தியத்தின் கீழ் அகப்பட்டிருக்கிறது...... இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அமெரிக்க முதலீடுகள் 1000 கோடி டாலர் எல்லையைக் கடந்து விட்டன. லத்தீன் அமெரிக்கா இயற்கை மூலப் பொருள்களை மலிவாகக் கொடுத்து, உற்பத்திப் பண்டங்களை பெரும் விலைக்கு வாங்குகின்றது...அதே வேளையில் லத்தின் அமெரிக்காவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குப் பணம் சோனவாரியாக ஓடிக்கொண்டிருக்கிறது. நிமிஷத்துக்கு 4000 டாலர்; நாளுக்கு 50 லட்சம்; ஆண்டுக்கு 200 கோடி; 5 வருடத்துக்கு 1000 கோடி; எங்களை விட்டு நீங்கும் ஒவ்வொரு 1000 டாலருக்கும் ஒரு பிணம் விட்டுச் செல்லப்படுகின்றது. **ஒரு பிணத்துக்கு 1000 டாலர். இது தான் ஏகாதிபத்தியம் எமக்களிக்கும் பரிசு! பிணம் ஒன்றுக்கு 1000 டாலர்; நிமிஷத்துக்கு 4 பிணம்.**

### அமெரிக்க ஏகாதிபத்தியம்

இதுதான் புதிய காலனிஸத்தின் விஸ்பரூபம். இதன் பிரதான எஜமானுக விளங்குவது அமெரிக்க ஏகாதிபத்தியமாகும். இதை மாஸ்கோ அறிக்கை, ''இன்று காலனி ஆதிக்கத்தின் பிரதான ஆதாரமாக விளங்குவதுஅமெரிக்கா தான். அமெரிக்காவின் தலைமையிலுள்ள ஏகாதிபத்திய வாதிகள் புதிய வழிகளில், புதிய உருவங்களின் மூலம் பழைய காலனிநாட்டு மக்களைத் தொடர்ந்து சுரண்ட வெறித்தனமான முயற்சிகள் செய்து வருகிருர்கள். ஏகபோக முதலாளிகள் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரத்தின் மீதும், அரசியலின் மீதும் தமது செல்வாக்கை நீடித்து வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றது. எனவே காலனிஸ எதிர்ப்புப் போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாகவே விளங்குகின்றது. இதை எப்படி நடத்துவது, புரட்சிப் போராட்டத்தின் மூலமா? அல்லது சமாதானமாகவா? என்பதில் மார்க்ஸிஸ-லெனினிஸ வாதிகளுக்கும் நவீன திரிபுவாதிகளுக்கும் பெரும் வேறுபாடு எப்பொழுதும் இருந்து வருகின்றது.



**கே. ஏ. சுப்பிரமணியம்**

செயலாளர் யாழ்-பிரதேச கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம்.

மார்க்ஸிஸ வாதியான லெனின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும், வர்க்கங்களும் தம்மைப் பூரணமாக விடுதலை செய்து கொள்ள வேண்டுமானல் புரட்சி நடத்தியே ஆகவேண்டும் என்று கூறுகின்ருர். அப்படிப் புரட்சிகள் நடத்துவதும் தவிர்க்க முடியாதது.

''இந்த 20-ம் நூற்ருண்டின் வரலாறு, கட்டுப்பாடற்ற ஏகாதிபத்தியம் நிலவும் இந் நூற்ருண்டு காலனி யுத்தங்கள் நிறைந்த ஒன்று'' ''ஏகாதிபத்திய தேசிய விடுதலை யுத்தங்களையும் தோற்றுவிப்பது தவிர்க்க முடியாதது'' என்று ''பாட்டாளி வர்க்கப் புரட்சியின் யுத்தத் திட்டம்'' என்ற நூலில் கூறுகிருர்.

தொடர்ந்து, ''ஏகாதிபத்தியத்தின் கீழ் தேசிய விடுதலை யுத்தம் தோன்றும் சாத்தியப்பாட்டை மறுப்பது சித்தாந்த ரீதியில் தவருனது மாத்திரமல்ல, வாலாற்று ரீதியிலும் பிழையானதாகும்'' என்றும் கூறுகின்ருர்.

### காலனி எதிர்ப்பு யுத்தங்களும் திரிபுவாதிகளும்

அன்றும் இன்றும் வாழ்ந்த திரிபுவாதிகள் அனைவரும் நேர்முகமாக காலனி எதிர்ப்பு யுத்தங்களை எதிர்க்க முடியவில்லை. ஏனெனில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவை இழந்துவிடவேண்டிவரும் என்பதற்காகவே. அவர்கள் சொல்லளவில் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் மக்களுக்கும் ஆதரவு தெரிவித்தார்கள். ஆனல் யுத்தத்தை எதிர்ப்பது என்ற சாக்குப் போக்கில் எல்லா யுத்தங்களையும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தும் நீதியான யுத்தங்களைக்கூட எதிர்த்தார்கள்; எதிர்க்கிருர்கள்.

இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த திரிபுவாதியான காட்ஷ்கி ''உலக சமாதானத்துக்கு ஏகாதிபத்தியத்திலிருந்து வரும் ஆபத்து மிகக் குறைவு. கீழ் நாடுகளில் விடுதலைக்கான முயற்சிகளிலிருந்து வரும் ஆபத்து பெரிதாக இருக்கின்றது'' என்று கூறினன்.

இன்றைய திரிபுவாதிகளான குருஷேவும் அவர் பரிவாரங்களும், இரண்டாவது அகிலத் திரிபுவாதிகளின் தர்க்கத்தை பின்பற்றி ''சிறிய பிரதேச யுத்தம் கூட உலக யுத்த மண்டலாக்கினியை உண்டாக்கிவிடும்.''

''இன்று எந்த வகையான யுத்தமும் அணு ஆயுதமற்ற யுத்தமாகத் தோன்றினலும், அது அழிவு தரும் அணு—ஏவாயுத யுத்தமாக மாறும் சாத்தியப்பாடு உண்டு.'' என்று கூறி மறைமுகமாக தேசிய விடுதலை யுத்தங்களை எதிர்க்கிருர்கள். இன்னும், இதனல், நோவாவின் பேழையை, எமது பூகோளத்தை அழித்து விடுவோம்'' என்று அச்சுறுத்துகிருர் குருசேவ்,

இரண்டாவது அகிலத்தின் போதும் சில திரிபுவாதிகள் தேசிய விடுதலை யுத்தம் ஏகாதிபத்திய யுத்தமாக பல ஏகாதிபத்தியர்கள் தலையிடும் யுத்தமாகமாறிவிடும் என்று கூறினர்கள். உதாரணமாக ஜுனியஸ்என்ற பெண் இத்தத்துவத்தை முன்வைத்திருந்த போது, ''ஒவ்வொரு தேசிய விடுதலை யுத்தமும் ஏகாதிபத்திய யுத்தமாக, மாற்றப்பட்டு விடும் என்ற இந்த நியாயம் தவருனது...'' என்று கூறினர். எனவே குருசேவின் அச்சுறுத்தல் தவறு, அவர் ஏகாதிபத்தியத்துக்கு தொண்டு செய்ய, அவர்கள் காலனி நலன்களைப் பேண, இத்தகைய யுத்தங்களை எதிர்க்கிருர் என்பது சொல்லாமலே விளங்கும். இன்னும் வரலாற்று ரீதியில் ஆல்ஜீரிய தேசிய விடுதலைப் புரட்சி, கியூபா புரட்சி (இன்னும் பல) ஆகியவை உலக யுத்தத்தை உண்டாக்கவில்லையே! குருஷேவ் இவற்றுக்கு என்ன பதில் அளிக்க உள்ளார் ?

இனி நவீன திரிபுவாதிகள், காலனி ஒழிப்புப் பிரச்சினையைத் தீர்க்க சில சிகிச்சை முறைகளையும் கொடுத்திருக்கிருர்கள். இவையும், அவர்கள் தேசிய விடுதலை புரட்சிகளை எதிர்த்து வருவதை அப்பட்டமாகக் காட்டுகின்றன.

### உதவி என்ற ஏமாற்று

அவற்றில் ஒன்று 'உதவி' என்பதாகும். 22-வது காங்கிரஸின் போது சமர்ப்பிக்கப்பட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் அறிக்கை ''காலனியாதிக்கத்தின் தீய விளைவுகளைப் போக்கவேண்டும். அவர்கள் பொருளாதார கலாச்சார வளர்ச்சியுள்ள நாடுகளின் மட்டத்திற்கு எவ்வளவு துரிதமாக வளர முடியுமோ அவ்வளவு வேகமாக முன்னேற உதவி அளிக்கப்படவேண்டும்'' என்று கூறுகின்றது.

இதில் திரிபுவாதப் பாதையில் சென்று கொண்டிருக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், காலனி நாட்டு மக்கள் விடுதலை பெறுவது தமது விடுதலைப் போராட்டங்களால் அல்ல, உதவிகளால் என்பது போலக் கூறுவது உண்மையில் மார்க்ஸிஸ—லெனினிஸத்துக்கு அப்பாற்பட்ட திரிபுவாதக் கண்ணேட்டமாகும். இன்னும் 1959-ம் ஆண்டு குருஷேவ் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தபோது கூறிய கருத்து இன்னும் வேடிக்கையானது. காலனிஸத்தின் கோட்டையாக விளங்கும் அமெரிக்கா இதர நாடுகளுக்கு அளிக்கும் உதவி அந்த நாடுகளைத் தமது கால்களில் எழுந்திருக்கத் துணைபுரியும் என்று கூறினர்.

''தமது பொருளாதார வளர்ச்சியில் பல நூற்ருண்டுகள் பின் தங்கியுள்ள நாட்டு மக்கள், தமது கால்களில் விரைவாக எழுந்து நிற்க, நமது இரு வல்லரசுகளின் உதவியை எதிர்பார்க்கும் உலக மக்கள் அனைவராலும் உங்களுடைய, எங்களுடைய பொருளாதார சாதனைகள் இரண்டும் போற்றப்படும்'' என்று (1959-9-17) கூறினர்.

இதில் அரசியல் நிபந்தனைகளோடும் அளிக்கப்படும் ஏகாதிபத்தியத்தின் உதவிகளை சோஷலிஸ நாடுகள் அளிக்கும் உதவிகளோடு சமப்படுத்திக் கூறுவது மாத்திரமின்றி, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் உதவிகளில் இதர நாடுகள் சந்தேகப்பட வேண்டிய நிலையையும் உண்டுபண்ணுகின்றது குருசேவின் வர்த்தை. திரிபுவாதிகளின் கரத்தில், காலனிநாடுகள் ஏகாதிபத்திய வாதிகளின் உதவியுடன் விடுதலை பெறலாம் போலும்.

(அடுத்த வாரம் முடியு...

**உலகத் தொழிலாள வர்க்கத்தின் உரிமைக்குரல் வானம்முட்ட உயர்ந்தது. இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கிய கீதம் நகரெங்கும் கேட்டது. தொழிலாளரின் போர் முரசு இறுமாப்புடன் நாதம் செய்தது.**

# புதிய வாழ்வு படைக்கும் புரட்சிகர மே தினம்

## வர்க்க ஒற்றுமையின் குரல் உயர்ந்தது

## உணர்வூட்டும் கம்யூனிஸ்ட் ஊர்வலம்

ஏகாதிபத்தியம் அதிர்ந்தது.

முதலாளித்துவம் கலங்கியது.

தொழிலாளர் துரோகிகள் தொடை நடுங்கினர்.

பிராவ்டாவின் 'புலுடா' அம்பலமாகியது.

பீட்டரின்பொய் வெளிவந்தது.

தொழிலாளர் வீராவேசமும் களிப்பும் ஒரே நேரத்தில் கொண்டவராக, உலகம் தமது என்ற உணர்வில் நெஞ்சை நிமிர்த்தி வீரவலம் வந்தனர். ஆண்களுக்கு நாம் என்ன குறைவா?

புதிய வாழ்வு படைப்பதில் நாமும் புத்துலகச் சிற்பிகளுடன் இணைந்துநிற்போம் என்ற தமது உறுதியை உலகுக்குப் பறைசாற்றியவண்ணம் தாய்க் குலம், குழந்தைச் செல்வங்கள் கூட நேர் கொண்ட பார்வையுடன் நடந்து வந்தனர். போராட்டம் கண்டு பயந்து நடுங்கும் கோழைகளே! புரட்சிகரப் பாரம்பர்யமுள்ள ஈழத்து வாலிபர்கள் நாம். புரட்சிக்கு எந் நேரமும் தயார் என்ற புதுமைச்சபதம் கொண்ட வீரமும் தீரமும் நிறைந்த வாலிபர்களின் காட்சி எவர் மனதிலும் வீர முறுக்கேற்றும் ஆனந்தக் காட்சி.

ஆம். இலங்கையின் புரட்சிகர அணிகளின் மேதின ஊர்வலம் எழுத்தால், பேச்சால் விபரிக்கமுடியாதளவிற்குசிறப்புடனும் பொலிவுடனும் திகழ்ந்தது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை கம்யூனிஸ்ட்மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம், ஆகியவற்றின் பெயர்களைப் பிரசித்தமாகத் தாங்கியவாறு 21 கோரிக்கைகளின் வெற்றிக்காகவும், தனியொரு தொழிற்சங்க மத்தியஸ்தானத்திற்காகவும் புரட்சிகரத் தலைமைக்காகவும், வாலிபரின்உரிமைக்காகவும்கோஷங்களைத் தாங்கி ஊர்வலத்துக்கு இடையே வந்தன மூன்று லாரிகள்.

கொம்பனித் தெரு டீ மெல் பார்க்கில் 2 மணிக்கு ஆரம்பமாகிய ஊர்வலம் கொம்பனித் தெரு வீதிகள் முழுதும் நிரம்பி வழிந்தது. வீதி ஓரங்களில் மக்கள் பரந்து நின்று புரட்சிப் படையினருக்கு வாழ்த்துக் கூறி வழியனுப்பிவைத்தனர்.

ஊர்வலத்தின் முன்னல் தோழர்கள் பிரேமலால் குமாரசிறி, நா. சண்முகதாசன், டபிள்யு. ஏ. தர்மதாச, என். எல். பெரேரா ஆகியவர்கள் தலைமைதாங்கிச் சென்றனர். இவர்களின் முன்னல் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் வாலிபர்களும் பதாகை தாங்கி இருசாரியாகச் சென்றனர். அடுத்ததாக நூற்றுக்கணக்கான தொண்டர் படையினர் இராணுவ மிடுக்குடன் நடந்து சென்றனர்.

இவ்வருட மேதின ஊர்வலத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் மாதர்களின் முக்கிய பங்காகும். சிறந்த புரட்சிக் கோஷங்களையும், உரிமை முழக்கத்தையும் எழுப்பிச் சென்ற அவர்களை வீதிவழியே நின்ற ஜனசமுத்திரம் கண்டு பெரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. தாய்க் குலத்தினருக்கு முன்னல் குழந்தைச் செல்வங்கள் பலூன்கள் தாங்கி குறு நடை பயின்று, சிறு குரல் எழுப்பி ஆடிப்பாடிச் சென்றது அனைவர் மனதையும் அள்ளும் இன்பக்காட்சியாகும்.

மாதரைத் தொடர்ந்து வாலிபரும்,இலங்கை பூராவுமுள்ள தொழிலாளர்களின் முன்னணி அங்கத்தவர்களும் தமது சங்கத்தின் கொடிகளை பெருமிதத்துடன் உயர்த்திப் பிடித்தவண்ணம் சென்றனர். தொழிலாளரின் வர்க்க ஐக்கியத்தை விளக்கும் முறையில் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தமிழ் மொழியில் ஒற்றுமைக் கோஷங்கள் கிளப்பிய வண்ணம் தொழிலாளர் படையின் உருக்கனைய உறுதியைக் காட்டிய வண்ணம் வந்தனர். சிங்களத் தொழிலாளர்கள் வகுப்புவாதம் ஒழிக என்று உணர்ச்சியின் உச்சஸ்தாயியில் நின்று முழக்கம் செய்து கொண்டே சென்றனர். சில தமிழ்த் தோழர்கள் தமக்குத்தெரிந்த சிங்களத்தில் தப்பும் தவறுமாக கோஷமிட்டது வேடிக்கையாகவும், அதே நேரத்தில் வர்க்க ஒற்றுமையைக் காட்டுவதாகவும் அமைந்தது. அதேபோல் சிங்களத் தோழர்கள் கொச்சைத் தமிழில் சில கோஷங்கள் போட முயன்றதும் மனமகிழ்வு தரும் நிகழ்ச்சிகளாகும்.

சீர்திருத்தவாத என். எம். பெரேராக்களும், திரிபுவாத பீட்டர் கெனமன்களும், வகுப்புவாதபிலிப் குணவர்த்தனக்களும் கைவிட்டுக்காட்டிக்கொடுத்த கொள்கைகளைக் காப்பவர்கள் இம் மேதினத்தில் திரண்டு சென்றனர் என்பதை கோஷங்கள்அனைவர்க்கும்காட்டின. "மாக்ஸ்-லெனின் கிய பாறே, லெனின் - ஸ்டாலின் கிய பாறே, மாசே - துங் கிய பாறே, கிம் இல்-சுங் கிய பாறே, ஹோசி-மின் கிய பாறே, புரன் அப்பு கிய பாறே, கெப்பட்டிப்பொலகியபாறே; அப்பியன்னே ஏ பாறே, செவல ஹவுலஅப்பிட்ட எப்பா, டட்லிகியா ரஜகெதரட்ட, என். எம். கியா நுவரெலியட்ட, அபி யன்னே விப்லவ யட்ட; அத்த திப்போத் கோரிகொடாயி, போன்றஇன்னபல கோஷங்கள் எமது பரம்பரையைப் பறைசாற்றியது. அத்துடன்மாக்ஸ், லெனின், ஏங்கல்ஸ், ஸ்டாலின், மா ஒத பிடெல்காஸ்ட்ரோ ஆகியவர்களின்பெரிய படங்களை ஊர்வலம்உயர்த்திச் சென்றது. ஆம் அவர்களைத் திரிபுவாதக் கும்பலிடமிருந்து காப்பாற்றுபவர்கள் நாம் தான். வீர கெப்பிட்டிப் பொலவின் முழு உருவப் படம் ஒன்றையும் எமது ஊர்வலம் இழுத்துச் சென்றது. உண்மையில் இக் காட்சி ஊர்வலத்தில் சென்றவர்களினதும், தெரு வழியே நின்றவர்களினதும் போராட்ட உணர்வைக் கூட்டியது.

இம்முறை ஊர்வலத்தில் குறிப்பிடத்தக்கஇன்னுமொரு அம்சம் அதில் காணப்பட்ட கலை அம்சமாகும். தொழிலாள வர்க்கக் கலையின் தன்மை எத்தகைய உருவம் எடுக்க வேண்டும்; எடுக்க முடியும் என்பதை ஊர்வலம் காட்டியது. இதன் காரண கர்த்தாவான தியாகச் செம்மலும் ஐக்கிய எஞ்சினியரிங் தொழிலாளர் சங்கக் காரியதரிசியும், தொழிலாளர் கலைஞனுமான தோழர் டி. ஹென்றியை எவ்வகையில் பாராட்டினலும் பெறும். பல தொழிற் சங்க கட்சி ஊர்வலங்களின் வெற்றிக்கு பின்னணியில் இருந்து காரண கர்த்தாவாக இருக்கும் தோழர் ஹென்றியின் திறமை மறைக்க முடியாதளவிற்கு இம்முறை பளிச்சிட்டது,

கம்யூனிஸ்ட் ஊர்வலம் வேறெந்தக் கட்சியின் ஊர்வலத்திலும் பார்க்கப் பிரமாண்டமானதாக இருந்தது. ஓர் இடத்தைத் தாண்ட முப்பத்தேழு நிமிஷங்களுக்கு மேல் எடுத்த கம்யூனிஸ்ட் ஊர்வலம் இரு இடங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஊர்வலத்துடனும், யூ. என். பி. ஊர்வலத்துடனும் ஏற்படவிருந்த கைகலப்பைத் தடுத்து முன்சென்றது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் கைகலப்பு ஏற்படவிரு



தோழர் ஹென்றி

ந்த நேரத்தில் புரட்சி வெறி கொண்ட எமது தோழர்களின் நிலை, தொழிலாளர்கள் ஒற்றுமை கொண்டு கிளர்ந்தெழுந்தால் உலகில் எந்தச் சக்தியும் அவர்களுக்கு எதிராக நிற்கமுடியாது. என்பதை அனைவர்க்கும் தத்ரூபமாகக் காட்டியது. எமது ஊர்வலத்தைக் கண்ட மக்களெல்லாம் மூக்கில் கையைவைத்து ஆச்சரியப்பட்டனர்.

ஊர்வலம் முடிவில் டீமெல் பாக்கில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் தோழர். ஏ. ஆர். எட்மண்ட் தலைமை வகித்தார். தோழர்கள் பிரேமலால் குமாரசிறி, நா. சண்முகதாசன், டபிள்யூ. ஏ. தர்மதாச, என். எல். பெரேரா, எம். சி. எம். சாலி, சமல் த சில்வா, எச். ஆரியதாச ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

எமது மேதின ஊர்வலமும் கூட்டமும் தொழிலாளத் தோழர்கட்கும் பொதுமக்களுக்கும் பெரும் உற்சாகமாக அமைந்தது,

-(நமது விசேஷ நிருபர்)

வாசியுங்கள்

யுவசக்தி

மேதின, காலனி
எதிர்ப்பு சிறப்பு இதழ்

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:


இலங்கை டிரேட் எக்ஸசேஞ்

மெர்க்கண்டைல்ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

தொழிலாளி

# புரட்சியே எமது விமோசன பாதை

## எமது வேதம் அல்லல் படுவோரின் கீதம்



இலங்கைக் கம்யூனிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி தோழர்

**பிரேமலால் குமாரசிறி**

டீ மெல் பார்க்கில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மேதினக் கூட்டத்தில் ஆற்றிய புரட்சிகர சொற்பொழிவு.

ஆட்சியைப் பிற்போக்காளர் கைப்பற்றும் ஆபத்து 1956க்குப் பின்னர் எப்பொழுதும் இருந்து வருகிறது. 1960 மார்ச்சில் உண்மையில் ஓட்டு மூலமே இது நடைபெற்றது. 1962 ஜனவரியில் துப்பாக்கி வேட்டு மூலம் இது நடைபெற விருந்தது. இவ்வாபத்து தொடர்கின்றது. பிற்போக்கின் பொருளாதார, சமுதாய மற்றும் தளங்கள் இருக்குமட்டும் இவ்வாபத்தை நீக்க முடியாது. இத் தளங்களை ஒழிப்பதன் மூலம்தான் இவ்வாபத்தை பூரணமாக ஒழித்தல் முடியும். ஆகவே சிலரை மந்திரிப் பதவிகளிலிருந்து விலக்கி வேறு சிலரைச் சேர்த்துக் கொள்வதல்ல இன்று நாட்டின் முன்னுள்ள பிரச்சினை. சிலர் பதவியைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேறுசிலர் அதிகாரத்தை ருசி பார்க்கவும் அமைக்கக்கூடிய கொள்கையற்ற சந்தர்ப்பவாதக் கூட்டுக்களுமல்ல எமது பிரச்சினை. பிற்போக்கின் பொருளாதார சமுதாய மற்றும் தளங்களை ஒழிப்பதற்காக, முற்போக்கு சக்திகள் அனைத்தையும் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் பரந்த வெகுஜன நடவடிக்கைகளுக்காக ஒன்று திரட்டுவதே நமது பிரச்சினை.

சில பதவி ஆசைபிடித்த இடதுசாரித் தலைவர்கள் ஒரு சில பதவிகளுக்காக உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களைத் தத்தம் செய்யும் முயற்சிகளில் ஈடுபடுவதை நாம் இம் மே தினத்தில் வன்மையாக எதிர்க்கின்றோம். தொழிலாளவர்க்க இயக்கம் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சிக்குப்பணிந்துபோவதை நாம் தடுத்து நிறுத்துதல் வேண்டும். ஏகாதிபத்தியம், பிற்போக்கை எதிர்த்த பரந்த அணியில் தொழிலாள வர்க்கத்தின் தனிப்பட்ட சுதந்திரத் தன்மையையும், தலைமையையும் மறுப்பது முழுக்க முழுக்கத் தவறு. அங்ஙனமே அத்தகைய அணியின் ஒரு பங்குதாரராக வேண்டிய மத்தியதர சக்திகளின் பாத்திரத்தையும் மறுப்பது தவறானதாகும்; மிகவும் பாதகமானதாகும்.

### திரிபுவாதம் ஒழிக

நவீன திரிபுவாதத்தை எதிர்த்து, மாக்சிஸ-லெனிஸத்தின் புரட்சிகரக் கொள்கைகளுக்காக தொழிலாள வர்க்கத்தில் ஓராண்டு காலமாக உக்கிரமான போராட்டம் நடைபெற்றபின் 1964 மே தினம் நடைபெறுகின்றது. இந்த நாட்டுத் தொழிலாள வர்க்க இயக்கத்திலும், அரசியல் வாழ்விலும் மிகவும் பலமாக வெளிப்பட்ட திரிபுவாதத்தையும் சீர்திருத்த வாதத்தையும் எதிர்த்து தத்துவார்த்தம் அரசியல், தொழிற் சங்க இயக்கம், ஸ்தாபன முறை ஆகிய பல துறைகளிலும் போராடுதல் வேண்டும். கமிட்டிகளிலும், பாக்டரிகளிலும் அதை எதிர்த்துப்போரிடுதல்வேண்டும். மாநாடுகளிலும் வீதிகளிலும் அதை எதிர்த்துப் போரிடுதல் வேண்டும். நாம் இப் போராட்டத்தின் முதல் களத்தில் வெற்றிகண்டுள்ளோம் என்பதைப் பெருமையுடன் கூறுகின்றோம். போராட்டப் பதாகையையும், தொழிலாள வர்க்கத்தின் உயிர் நாடியான மாக்சிஸ-லெனினிஸப் பதாகையையும் நாம் பாதுகாத்துக் காப்பாற்றியுள்ளோம். என்றாலும் போராட்டம் இன்னும் முடியவில்லை. சர்வதேசிய ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் அது தொடர்ந்து நடைபெறுகின்றது. சர்வதேசிய தொழிலாள வர்க்க இயக்கத்தில் உருவாகியதோர் திரிபு மட்டுமல்லாது அவ்வியக்கத்தையே நாசம் செய்ய முயலும் பயங்கர சக்தியுமான திரிபுவாதத்தை நாம் பூரணமாகவும், இறுதியாகவும் அழித்தொழித்தல் வேண்டும். தொழிலாள வர்க்கத்தின் வெற்றி, சர்வதேசிய ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் திரிபுவாதத்தை ஒழிப்பதிலேயே தங்கியிருக்கின்றது என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

திரிபுவாதத்தை எதிர்த்த எமது போராட்டத்தின் அடுத்த கட்டத்தை நாம் அடைந்துள்ளோம். போதனை, ஸ்தாபனம், இன்றுள்ள சக்திகளைப் பலப்படுத்தல், புதிய சக்திகளைச் சேர்த்தல் ஆகிய நடவடிக்கைகளை இக் கட்டம் கொண்டுள்ளது. இலங்கைப் புரட்சியின் பிரத்தியேக அம்சங்களை விஞ்ஞான ரீதியாகப் படிப்பதையும், எமது மக்களை விடுதலைக்குத் தலைமை தாங்கிச் செல்லக்கூடிய புரட்சிகரக் கொள்கைகளைப் படிப்படியாக அமுல் படுத்துவதையும் இது உள்ளடக்குகின்றது.

### புதிய தலைமை

எமது நாட்டுத் தொழிலாள வர்க்க இயக்கத்தின் வரலாற்றில் புதியதோர் கட்டத்தை 1964 மே தினம் குறிக்கின்றது. இக்கட்டத்தின் இரு குறிப்பிடத்தக்க அம்சங்களாவன:

1. ஏகாதிபத்திய விரோத நிலப்பிரபுத்துவ விரோதப் புரட்சியில் தனது தலைமை ஸ்தாபிக்கத் தொழிலாள வர்க்கம் நடாத்தும் உறுதி மிக்க உணர்வுபூர்வமான போராட்டம்.
2. தனது அணிகளிலிருந்தே தலைமையை உருவாக்கவும் வளர்க்கவும் தொழிலாள வர்க்கம் எடுக்கும் உறுதியான உணர்வு பூர்வமான முயற்சிகள்.

போலிக் கோஷங்களை நம்பி ஐக்கிய தேசியக் கட்சியை உழைக்கும் மக்கள் நம்பியதோர் காலம் இருந்தது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி பசுத்தோல் போர்த்த புலி என்பது அம்பலமாகியது. வாக்குறுதிகளை நம்பி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை உழைக்கும் மக்கள் நம்பிய காலம் இருந்தது. ஆனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இவ் வாக்குறுதிகளை நிறைவேற்றத் திராணியற்றதும் விருப்பமற்றதும் என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது. பல்லாண்டுகாலமாகத்தாம் உருவாக்கி, நம்பிக்கை கொண்டிருந்த இடதுசாரித் தலைவர்களை உழைக்கும் மக்கள் நம்பிய காலம் இருந்தது. ஆனால் அவர்கள் முதலாளித்துவ அரசியல் வாதிகளின் ஒரு கூட்டம் என்பதும், நம்பிக்கை வைக்க முடியாதவர்கள்—உறுதியற்றவர்கள் என்பதும், பதவிஆசை பிடித்த சந்தர்ப்ப வாதிகள் என்பதும் இப்பொழுது புலனாகின்றன. எமது நாட்டு உழைக்கும் மக்கள் தம்மை நம்ப ஆரம்பிப்பதுடன் 1964 மே தினம் உதயமாகின்றது.

எங்களை, விழல் அளந்து பொய் பேசி ஏமாற்றி உள்ளனர். எம்மைக் காட்டிக் கொடுத்துள்ளனர். முப்பதாண்டு காலமாக மாக்ஸிஸ-லெனினிஸ அறிவுப் பெட்டகத்தைப் பூட்டி வைத்துள்ளனர். தேர்தல்கால வாக்காளர்களாகவும். ஊழியர்களாகவுமே எங்களைப் பாவித்தனர்.

எமது விதியை நாங்களே நிர்ணயிக்கும் காலம் வந்துவிட்டது. எமது வெற்றிப் பாதையைக் காட்டும் மாக்ஸிஸ-லெனினிஸ விஞ்ஞானத்தை நாம் எமது மொழியில் கற்போம்; நாம் எமது புதிய தலைமையைஉருவாக்குவோம். எமது நம்பகமான நண்பனை கிராமங்களில் வாழும் எமது உழைக்கும் சகோதரர்களாகிய விவசாய வர்க்கத்தை இணைப்போம். மற்றைய முற்போக்கு சக்திகளுடன் ஒன்றுசேர்வோம்.

சந்தர்ப்பவாத சுயநல ஆசைகள் எம்மிடம் கிடையாது. ஆகவே நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. மார்க்ஸ் கூறியவாறு ''எமது அடிமைத் தளைகளைத் தவிர நாம் இழப்பதற்கு ஒன்றுமேயில்லை. வெல்வதற்கோ ஓர் உலகமுண்டு.'' எமது வேதம் வாழ்வின் அடித்தளத்தில் அல்லல் படுபவரின் கீதம். எமது அறிக்கை போராட்ட அறிக்கை.

நாம் எமது நோக்கங்களை மறைப்பதில்லை. நாம் தந்திரங்களில் ஈடுபடுவதில்லை. கயிற்றில் நடப்பதில்லை. முதலாளித்துவ ஏகாதிபத்திய தரத்தினராயிருந்தாலும் சரி, திரிபுவாதத் துரோகக் கும்பல் வகையினரானாலும் சரி எமது எதிரிகள் நடுங்கட்டும். நாம் போராடுவோம். போராட்டங்கள் நடத்துவோம். நாம் தளராது தயங்காது எமது நோக்கத்தை நிறைவேற்ற முன்செல்வோம்.

### புரட்சியே எமது பாதை

நாம் புரட்சியைக் கண்டு பயப்படவில்லை. நாம் புரட்சி செய்யத் துணிவோம். புரட்சி எமது விமோசன பாதை. எந்தத் தேசாபிமானியும், எந்தச் சோஷலிசவாதியும் புரட்சியைக் கண்டு பயப்படவேண்டிய அவசியமில்லை. எமது புரட்சியில் எமது நண்பர்கள் யார், எதிரிகள் யார்என்பதை தெரிந்துகொள்வோம். எமது நண்பர்களின் ஆதரவை நாம் கோருகின்றோம். பெறுவோம். எமது எதிரிகளுடன் ஈவிரக்கமின்றி நாம் நடந்துகொள்வோம்.

புரட்சி என்பது என்ன? முதலாவதாக இன்றைய நெருக்கடிக்குத் தீர்வு அதுவே. சிலர் பாராளுமன்ற வரையறைக்குள் தீர்வுகாண முயல்கின்றனர். இன்றைய நெருக்கடி அடிப்படையில் ஓர் பொருளாதார நெருக்கடியேயாகும். ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோதப் புரட்சிகரக் கடமைகளைப் பூரணமாக்குவதன் மூலமே இந் நெருக்கடியைத் தீர்க்கமுடியும். எமதுபிரதான எதிரியான ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்நாட்டு அடிவருடிகளையும் எதிர்த்து ஏதாவது வழியில் பரந்த வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டங்களை ஒழுங்கு செய்து தலைமை தாங்குவதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும். அதுதான் புரட்சி!

எவர் பலம் மிக்கவர்கள்? எவர் பெரும்பான்மையினர்? தொகையும், முக்கிய அந்தஸ்தும் இதனைத் தீர்மானிக்க மாட்டாது. பார்க்கப்போனால் மார்க்ஸும், ஏங்கல்சும் இருவராகவே ஆரம்பித்தனர். ஆனால் அவர்கள் உலகில் மூன்றிலொரு பகுதியில் இப்பொழுது பரவியுள்ளதும், மிகுதிப் பகுதியில் வேகமாகப் பரவி வருவதுமான ஓர் பிரமாண்ட புரட்சிகர அலையை உந்தித் தள்ளிவிட்டனர். மேதை லெனின் தலைமையில் புரட்சியில் ஈடுபட்டபொழுது சோவியத் நாட்டு மக்கள் தனியராகவே இருந்தனர். ஆனால் இன்று மனிதவர்க்கம் முழுவ

[இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம், இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கங்களின் சம்மேளனம் ஆகிய இலங்கைப் புரட்சிகர அணிகள் கூட்டாக நடாத்திய கம்யூனிஸ்ட் மே தினத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.]

### கூட்டரசாங்கம்

1. செல்வாக்கிழந்த தொழிலாள வர்க்க விரோத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்கு தொழிலாள வர்க்கத்தினதும் இடதுசாரி இயக்கத்தினதும் ஆதரவை நல்கத் தற்பொழுது எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தையும் முற்போக்கு இயக்கத்தையும் இம் மே தினக் கூட்டம் எச்சரிக்கை செய்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஏற்படக்கூடிய கூட்டரசாங்கம் அடிப்படையில் இன்று வரை சரிவராத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கொள்கைகளின் அடிப்படையிலேயே அமைய முடியும். தொழிலாள வர்க்கத்தின் தலைமையில், சகல முற்போக்கு சக்திகளினதும் ஐக்கியத்தின் அடிப்படையிலும் அமைந்த அரசாங்கமே இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.

இடதுசாரி இயக்கத்தில் தற்பொழுது பரப்பப்படும்

தற்கும் புதிய பாதையை காட்டி நிற்கின்றனர். அவர்கள். இறுதியில் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தொகையும் பிரசித்திபெற்ற தலைவர்களின் தொகையுமல்ல முக்கியமானது. உழைப்பாளர் களின் தத்துவ அறிவு, அர்ப்பணிப்பு, உறுதி, போராட்டம், தியாகம் ஆகியவைதான் இறுதி வெற்றியைத் தீர்மானிக்கும்.

## சோஷலிஸம் காண்போம்!

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களில் பிரமாண்ட புரட்சிகரப் புயல் குமுறுகின்றது. ஏகாதிபத்தியம் தோல்விமேல் தோல்வி காண்கின்றது. சமாதானம், முன்னேற்றம், சுதந்திரம் சோஷலிஸம் ஆகியவற்றின் திகள் பலமுற்று வெற்றிமேல் வெற்றி ஈட்டுகின்றன. தோழர் மா சே-துங் கூறியவாறு "கீழைக் காற்றுமேலைகாற்றிலும் வீசுகின்றது." உலகம் பூராவிலுமுள்ள கோடிக் கணக்கான உழைப்பாளர்கள் அடக்குமுறையாளரை எதிர்த்தெழுகின்றனர். பிற்போக்கு அடக்குமுறையின் தளங்களைக் குலுக்குகின்றனர். ஏகாதிபத்தியத்தையும், சுரண்டலையும் எதிர்த்த, யுத்தத்தையும் பிற்போக்கையும் எதிர்த்த இப் பொதுப் போராட்டத்தில் இக் கோடிக் கணக்கான மக்களுடன் நாமும் இம் மேதினத்தில் ஒன்றுசேர்வோம். எமது தாய்நாட்டைப் பூரணமாக விடுதலையாக்கி சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதற்கு இம் மே தினத்தில் எம்மை அர்ப்பணம் செய்து உறுதிகொள்வோம்!


# புரட்சி வேகம் கொண்டெழும் தொழிலாளர் பெரும்படை

## பயங்கொண்ட துரோகிகள் கூட்டுச் சதி

மார்க்சிஸத் தோல்போர்த்து, தொழிலாள வர்க்க விரோத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்குத் தாம் அடிபணிந்து போவதைத் திரு. பீட்டர் கெனமன் போன்ற சில திரிபுவாதத் தலைவர்கள் மறைக்க முயல்வதைக் கண்டு தொழிலாள வர்க்கமும் முற்போக்கு இயக்கமும் ஏமாறுதல் கூடாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஏற்படக்கூடிய எந்த ஒப்பந்தமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கொள்கையின் அடிப்படையிலேயே ஏற்பட முடியும். இது முதலாளித்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துக்குத் தொழிலாள வர்க்கத்தையும் இடதுசாரி இயக்கத்தையும் பணிந்துபோகச் செய்வதைத் தவிர வேறொன்றுமில்லை.

இன்றைய வளர்ச்சிகள், பிரதானமாக இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே கூட்டரசாங்கம் ஏற்படுத்தும் முயற்சி கம்யூனிஸ்டுகள் முன்னரே கணித்துக் கொண்டது தான் எனத் தனது கட்சி வால்களுக்கு அழித்த சொற்பொழிவில் திரு. கெனமன் விளக்க முனைந்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடதுசாரி இயக்கத்தை அடிபணியச் செய்வதையும், சகல ஏகாதிபத்திய விரோத நிலப்பிரபுத்துவ விரோத சக்திகளையும்தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் ஒற்றுமைப் படுத்துவதையும் ஒரே விஷயமென அவர் நடிக்க முயல்கின்றார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 4-வது மாநாடு 1950ல் கோரியவாறும், 1963 ஹர்த்தால் தினத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி உறுதியளித்தவாறும், ஏகாதிபத்திய விரோத நிலப்பிரபுத்துவ விரோதப் புரட்சிகரக் கடமைகளைப் பூரணமாக்குவதற்கும், சோஷலிஸத்தைக் காண்பதற்கான அடிப்படையை உருவாக்குவதற்கும் அவசியமான ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத சக்திகள் அனைத்தினதும் ஒற்றுமையானது இன்று இடதுசாரி ஐக்கிய முன்னணி திட்டமிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பணிந்துபோகும் முறைக்குப் பூரணமாக முரணானதாகும். இவை இரண்டும் ஒன்றெனப் பொய்ப் பேச்சுப் பேசுவதால் யரையும் ஏமாற்ற முடியாது.



இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தோழர் நா. சண்முகதாசன் மேதினத்தில் டீ மெல் பார்க்கில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

சென்ற வருடம் இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்ட பொழுது, மோசமான தொழிலாள வர்க்க விரோத ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இடத்தில் இடதுசாரி அரசாங்கத்தை ஏற்படுத்துவது என இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்கள் உறுதியளித்தனர். இன்று இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்கள் பதவிக்காக வயிற்றால் தவழ்ந்து பிரதம மந்திரியிடம் செல்கின்றனர். அது மட்டுமல்லாது இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களில் முக்கியமானவர், நுவரெலியா சுகாதாரப் பிரதேசத்தில் பிரதம மந்திரியின் மகனுடன் கிரிக்கெட் ஆட்டம் ஆடி பிரதம மந்திரியை 'தாஜா' செய்ய எடுத்த மானங்கெட்ட நடவடிக்கையையும் நாம் கண்டோம். இத்தகைய மன மாற்ற நிலை ஏற்படுவதற்கு ஓராண்டுக் காலத்தில் என்ன நடந்தது.

யூ.என்.பி. பிரதிநிதித்துவப்படுத்தும் வலதுசாரிச் சக்திகளின் வளர்ச்சி கண்டு இடதுசாரி ஐங்கிய முன்னணித் தலைவர்கள் பீதியடைந்துள்ளனர் என்று கூறுவதை நாம் நம்பத் தயாராயில்லை. 1962 ஜனவரி சதிக் காலம் போன்ற கூடுதலான வலதுசாரி ஆபத்து நிறைந்த காலங்கள் இருந்துள்ளன. ஆனால் பல இடதுசாரித் தலைவர்கள் அப்பொழுது இம்மியும் அசையவில்லை. அப்படியாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பணிந்து போவதன் உண்மைக் காரணம் என்ன? வயதுமுதிர்ந்து கிழடு தட்டியதோ சுயநல சந்தர்ப்பவாதமோ மட்டும் இதற்குக் காரணமாகாது.

ஏகாதிபத்தியம் உள்நாட்டு முதலாளித்துவம் ஆகியவற்றைப் பாதித்து இன்றைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மறுத்து, தொழிலாள வர்க்க அதிருப்தியைச் சமாளிப்பதற்காகவும் அதன் கொள்கைகளுக் கெதிரான தொழிலாள வர்க்கப் போராட்டங்களைத்தடுப்பதற்காகவும் மந்திரி சபைக்குள் இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களை எடுக்க விரும்புகின்றது. தொழிலாளவர்க்கத்தின் வளர்ந்துவரும் புரட்சிகர உணர்வைக் கண்டும், அவர்கள் தமது கோரிக்கைகளுக்காதரவாக நீண்ட காலங்களுக்குக் கூடப் போராட்ட நடவடிக்கையில் ஈடுபடத் தயாராயிருப்பதைக் கண்டும் இடதுசாரி ஐக்கிய முன்னணி பயங்கொண்டுள்ளது. ஆகவே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் கூடுதலாக ஒற்றுமை காண்கின்றன. பரந்த வெகுஜனப் போராட்டங்களுக்கு இவை காட்டும் பொதுவான பயமே இவ் வொற்றுமைக்குக் காரணம்.

1963 ஜனவரி-பெப்ரவரியில் இம் மூன்று கட்சிகளினதும் உத்தியோக பூர்வமான தலைமை இ. போ. ச. வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்த பொழுது நாம் இச் சமரச நாடகத்தின் ஆரம்பத்தைக் கண்டோம். இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைமையிலுள்ள தொழிற் சங்கங்கள் 21 கோரிக்கைகளை அரசாங்கத்துக்கும் முதலாளிமார்களுக்கும் சமர்ப்பிக்கவும் அவற்றினை வென்றெடுக்க உடனடியாக கூட்டுப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தவும் தயங்குவதில் நாம் இப்போக்கை இன்று காண்கிறோம். பல மாதக் கணக்காக உருவாக்கப்பட்டு, 1963 செப்டம்பர் 29-ந் திகதியும், 1964 மார்ச் 21-ம் திகதியும் இருமுறை தொழிற்சங்க இயக்கம் ஏற்றுக்கொண்ட 21 கோரிக்கைகளை அரசாங்கத்துக்கும் முதலாளிமார்கட்கும் ஏன் இப்பொழுது சமர்ப்பிக்க முடியாது என்பதை எந்தத் தொழிலாளியும் புரிந்துகொள்ள முடியுமா? தொழிலாளர்கள் தயாராயில்லை, அல்லது தொழிலாளர்கள் ஆயத்தமில்லை என்று வாதிடுவது தொழிலாளர்கட்கு அவமானம் தருவதாகும். 21 கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கும் அசௌகரியமான சம்பவத்தால் கூட்டரசாங்கப் பேச்சுவார்த்தைச் சூழ்நிலை நாசமாகலாம் என்று பயமடையும் சில குறிப்பிட்ட தலைவர்கள் தான் தயாராயில்லை.

-8ம் பக்கம் பார்க்க

# மேதினத் தீர்மானங்கள்

தவறான சீர்திருத்தவாத திரிபுவாதக் கொள்கைகளை எதிர்த்துப் போராடி அவற்றினை மறுத்துவிடுமாறு இக் கூட்டம் தொழிலாள வர்க்கத்திற்கு அழைப்பு விடுகிறது.

## 21 கோரிக்கைகள்

2. இருமுறை ஏற்றுக்கொள்ளப்பட்ட 21 கோரிக்கைகளை அரசாங்கத்துக்கும் முதலாளி மார்கட்கும் சமர்ப்பிப்பதில் உள்ள அநியாயமான தாமதத்தை இம் மே தினக் கூட்டம் எதிர்த்துக் கண்டிக்கின்றது.

இக் கோரிக்கைகளை அரசாங்கத்துக்கும் முதலாளி மார்கட்கும் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறும், அவை அளிக்கப்படாத பட்சத்தில் அவற்றிற்காதரவாக முழுத் தொழிற் சங்க இயக்கத்தையும் கூட்டுப் போராட்டத்திற்குத் தயார் செய்யுமாறும் இக் கூட்டம் கூட்டுத் தொழிற் சங்கக் கமிட்டியைக் கேட்டுக் கொள்கின்றது.

## 3. தனியொரு தொழிற் சங்க மத்திய ஸ்தானம்

21 கோரிக்கைகளை விரைவில் பெற்றெடுக்கும் போராட்டத்தின் அடிப்படையில், தொழிற் சங்க இயக்கத்தின் ஐக்கியம் கூடுதலாகப் பலமுறுவதை இக் கூட்டம் கோருகின்றது. இலங்கையில் தனியொரு தொழிற் சங்க மத்தியஸ்தானத்தை விரைவில் ஸ்தாபிப்பதை இக் கூட்டம் விளைகின்றது.

## 4. வாழ்க்கைச் செலவு

இவ்வாரம் ஆக உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவைத் தடுக்கஅரசாங்கம் நடவடிக்கை எடாமலிருப்பதையும், திறமையற்றிருப்பதையும் இக் கூட்டம் வன்மையாக எதிர்க்கின்றது.

சகல பாவனையாளர்கள் பொருட்களின் இறக்குமதியையும் அரசாங்கம் எடுப்பதன் மூலமும், கடுமையான விலைக் கட்டுப்பாட்டை அமுல் படுத்துவதன் மூலமும், லஞ்சத்தையும் கறுப்பு மார்கட்டையும் ஒழிப்பதன் மூலமும்,விநியோகஇயந்திரதில் மக்கள் பங்குகொள்ள உத்தரவாதம் செய்வதன் மூலமும் வாழ்க்கைச் செலவு உயர்வதைத் தடுக்கத் திறமையான நடடிக்கைகள் எடுக்குமாறு அரசாங்கத்தை இக் கூட்டம் கோருகின்றது

## 5. அமெரிக்க ஏழாவது படை

அமெரிக்க ஏழாவது படை இந்திய சமுத்திரத்துக்கு வந்ததை ஆசியாவின் சமாதானம் விரும்பும் மக்களுக்கெதிரான நடவடிக்கையென இம் மே தினக் கூட்டம் கண்டிக்கின்றது. இந்திய சமுத்திரத்திலிருந்து 7-வது படையை நீக்குவதற்கு சகல நடவடிக்கைகளையும் எமது அரசாங்கம் எடுத்தல் வேண்டுமெனக் கோரும் இம் மே தினக் கூட்டம் எமது மக்கள் அனைவரினதும் ஆதரவை அத்தகைய நடவடிக்கைக்கு உறுதியளிக்கின்றது.

## 6. சீனப் பிரஜைகளை விடுதலை செய்

இராணுவச் சதி நடைபெற்ற பொழுது அவசியமான உத்தரவு பெற்றும், நியாயமான அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காகவும் பிரேசிலில் இருந்த ஒன்பது சீனப் பிரஜைகளை பிரேசில் இராணுவ ஆட்சி கைது செய்து, சித்திரவதை செய்து, தைவானுக்கு அனுப்புவதாக மிரட்டல் செய்துள்ளதை இம் மே தினக் கூட்டம் கண்டிக்கின்றது.

பிரேசில் இராணுவ ஆட்சியின் இந் நடவடிக்கை மனிதஉரிமைகளுக்கும்,சர்வதேசியசட்டத்துக்கும் எதிரானது ஒன்பது சீனப் பிரஜைகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு இம் மே தினக் கூட்டம் கோருகின்றது.



# வங்கி முதலை லோகநாதன் பிதற்றல்
# பிலிப்பையாவே பாடம் படித்தீரா?

ஏப்ரில் மாதம் 21ம் திகதி இலங்கைக் கணக்காளர் மண்டபத்தில் உணவு விவசாய மந்திரியின் முன்னுள் நிரந்தரக் காரியதரிசி திரு ஆழ்வாப்பிள்ளை இலங்கையின் உணவுப் பிரச்சினை எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினுர். அதையடுத்து நடந்த விவாதத்தில்முன்னுள் உணவுமந்திரி திரு பிலிப் குணவர்த்தனு, வர்த்தகத் துறை முதலாளி திரு என். யூ. ஜெயவர்த்தனு, இலங்கை வங்கி மனேஜர் திரு லோகநாதன் என்போர் பங்குபற்றினர்.

உலக ஜனத் தொகையில் பாதிக்கு மேற்பட்டோருக்கு போதிய சிறந்த உணவு கிடையாமற் தவிக்கின்றுர்கள் எனவும், இதற்கு முக்கிய காரணம் உற்பத்தி செய்யப்பட்ட உணவை சீராகப் பங்கிடாமையே எனவும் தனது முன்னுரையிற் கூறினுர் திரு ஆழ்வாப்பிள்ளை. ஏகாதிபத்திய அமெரிக்காவில் விலைவாசியின் வீழ்ச்சியைத் தடுப்பதற்கு தமது உணவு உற்பத்தியை வேண்டும் என்றே குறைக்கின்றுர்கள், மேலும் சென்ற சுயஸ் கால்வாய் தகராறின் போது சீனியின் விலை விஷம் போல் ஏறியது, அமெரிக்கா சீனியைபெருமளவில்பதுக்கியதாலேயாகும்எனவும்கூறினுர். அவர் மேலும் கூறியதாவது எமது நாட்டில் இறக்குமதியாகும் அரிசிக்கு அரசாங்கம் வழங்கும் மான்யம் 1947இல் 9 கோடி 42 இலட்சம் ரூபாயிலிருந்து 1962/63 இல் 25 கோடி 50 இலட்சம் ரூபாயாக உயர்ந்துவிட்டது, அத்துடன் இங்கு உற்பத்தியாகும் நெல்லுக்கு அரசாங்கம்1புசலுக்கு12 ரூபா உத்தரவாத விலையாகக் கொடுக்கின்றது. எனவே சென்ற 22 வருடங்களாக வருடாவருடம் சராசரி 10 கோடி ரூபாயை அரசாங்கம் உணவு மான்யத்தில் செலவிடுகின்றது.

இதை எவ்வாறு வரவு செலவுத் திட்டத்தில் சரிக்கட்டலாம் என்பதைப் பற்றி விவாதிக்கும் பொழுது திரு பிலிப்குணவர்த்தனு அவர்கள் உணவு இலாக்காவிலும் விவசாய இலாக்காவிலும் நடைபெறும் தில்லுமுல்லுகளையும் ஊழல்களையும் அம்பலப் படுத்தினுர். இது யாவரும் அறிந்ததே. உத்தரவாத விலையான 12 ரூபா உண்மையில் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை என்றும், உற்பத்தியான நெல்லைக் குத்துவதற்கு வேண்டிய மில்கள் அந்தந்த இடங்களில் இல்லாததால் நெல்லைக் கொண்டு செல்லும் லொறிச் செலவு மிக அதிகமாகின்றதென்றும், குற்றிய நெல்லை சேமித்து வைப்பதற்கு ஏற்ற பண்டசாலைகள் இல்லை என்றும் கூறினுர் பிலிப்.

ஈற்றில் பேசிய பாங்குமுதலை லோகநாதன் மக்களை மாக்களாக நினைத்து படுபிற்போக்கான முறையில் பேசி அங்கிருந்த அனைவரின் வெறுப்பையும் அருவருப்பையும் பெற்றுர். அரசிமான்யச் சுமையில் அவதிப்படும் அரசாங்கத்துக்கு கை கொடுத்துதவத் திட்டம் ஒன்று வகுத்தார் இந்த பாங்குக்காரர். அவரின் திட்டம் வருமாறு:- அரிசிமான்யத்துக்குத் கென ஒரு தேசிய சுவீப் புத்திட்டத்தை நிறுவவேண்டுமாம். இலங்கை மக்களுக்கு பங்கீட்டரிசியிலும் பார்க்க சுவீப்புமோகம்தானும் பெரிது. ஆகவே கூப்பன் புத்தகத்தை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுத்தவர்களே இந்த சுவீப் புத் திட்டத்தில் பங்கு பற்றலாம் எனச் சட்டம் வைத்தால், பெரும்பான்மையினர் கூப்பனைக் கொடுத்து விட்டு சுவீப்ரிக்கற் கிழமை தோறும் வாங்க ஆரம்பித்துவிடுவார்கள்.

உணவுப் பிரச்சினை பற்றி உண்மையான நிலைமையையும் வழிவகைகளையும் புள்ளி விபரங்களையும் கேட்பதற்கென அன்றுபலர் குழுமியிருந்தனர். லோகநாதனின் ஆணவப் பேச்சை கேட்கச் சகிக்காத பலர் உடனடியாக வெளிநடப்புச் செய்ததில் ஆச்சரியமில்லை.

ஆயினும் இது எமக்கு நல்லதொரு பாடத்தைக் கற்பிக்கின்றது. மந்திரிகள் மாறுவதும் பாரளுமன்றம் மாறுவதும் மக்களின் நிலையை மாற்றப்போவதில்லை. உயர்ந்த அரச பதவிகளில் உள்ள திமிர்பிடித்த அதிகாரிகளை உதைத்துத் தள்ளல் வேண்டும்.

-நமது நிருபர்

## எமது குறிப்பு:

### ★ பிலிப் பேச்சு

ஐயா பிலிப் அவர்களே நீர் மந்திரியாக இருக்கும் போது நீர் இக் குறைகளை ஏன் நிவர்த்திக்க வில்லை. முயற்சித்துத் தோல்வியடைந்தால் அதில் இருந்து நீர் படிக்கும் பாடம் என்ன என நாம் அவரைத் திருப்பிக் கேட்டல் வேண்டும். முதலாளித்துவ அரசுடன் திரிபுவாத சோஷலிஸ்டுகள் கூட்டுச் சேர்ந்தாலும் யாது சாதிக்கமுடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

இரண்டு அல்லது மூன்று திரிபுவாத சோஷலிஸ்டுகள் மந்திரிப் பதவிப் பெற்றவுடன் அரசாங்கம் சோஷலிஸமாக மாறிவிடாது. இவர்கள் எவ்வளவுதான் பாராளுமன்றத்தில் கரடியாகக் கத்தினுலும் அரசைக் கொண்டு நடத்தும் விசேஷ நல அதிகாரிகளும் முதலாளிகளின் அடிவருடிகளும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவே இருப்பார்கள் என்பதை திரு பிலிப் குணவர்த்தனு இன்று கூற மறுக்கிருர்!

### ★ லோகநாதன் பேச்சு

துணிப் பஞ்சத்துக்கும் கூப்பன் வழங்கும் அரசாங்கம் லோகநாதன் திட்டப்படி அதற்குப் ஒரு சுவீப் ஆரம்பித்தால், மக்கள் கூப்பன்களைக் கொடுத்துவிட்டு நிர்வாணமாய் செல்வார்கள் என இப்பித்தலாட்டக்காரன் வாதாடுவான் போலும்.

# மக்கள் கஷ்டங்களுக்கு முடிவு காண்போம்

### வாலிபர் சங்கத்தில் உரை



தோழர் கரவைக் கந்தசாமி

"இன்று நாட்டிலே பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டம், குறைந்த சம்பளம், கூடுதலான வாழ்க்கைச் செலவு போன்றவற்றுள் நாட்டு மக்கள் மிகவும் துன்பப்படுகிருர்கள். இவற்றைத் தீர்க்க முடியாமல் ஆட்சியாளர்கள் தடுமாறுகிருர்கள். அதனுல் கொள்கையற்றவர் கூட்டுச்சாம்பார் ஆட்சி அளிப்பதன் மூலம் இந் நாட்டு மக்களை ஏமாற்ற முனைகின்றுர்கள்."

இவ்வாறு அண்மையில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற, வியாரக் கலை முற்போக்கு வாலிபர் சங்க ஆரம்பக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய இ. தொ. ச. ச. ஊவா பொதுப் பிரதிநிதி தோழர் கரவைக் கந்தசாமி குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில், "முதலாளித்துவ சமுதாயத்தில் இப் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாது. இவ்வித கஷ்டங்களுக்கு தீவிர முடிவுகாண உண்மையான தொழிலாள-விவசாய மக்கள் அரசாங்கம் ஏற்பட வேண்டும். அவ்வித ஆட்சியை அமைப்பது. இந்த நாட்டின் முதுகெலும்பாக வாழ்கின்ற வாலிபர்களது கடமை. ஆகவே அவர்கள் இத்தகைய வாலிபர் சங்கங்களின் மூலம் இந் நாட்டிலுள்ள சகல வாலிபர்களோடும் ஒன்றிணைந்து எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் சமுதாய மாற்றத்தில் பங்கு கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினுர்.

கீழ் காண்போா நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வி. பி. வேலு, காரியதரிசி: பி. எம். காலிமுத்து, தனுதிகாரி: பி. வேலுசாமி மற்றும் தோழர்கள் பி. எஸ். பிள்ளை, கே. மாணிக்கம், ஆகியோரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# தாயகம் தழைக்க வாலிபர் அணி

### திருகோணமலையில் வாலிபர் சங்கம்



தோழர் கே. எச். ஜயதிலக

"தரித்திரதில் மூழ்கி, நசுக்கப்பட்டிருக்கும் பாட்டாளி வர்க்கம் எத்தகைய கஷ்டங்களுக்கு இடையேயும் முற்போக்கு ரீதியாக முன்னேக்கி, சோஷலிச ஆட்சியை ஏற்படுத்த முனைந்து தேசிய ரீதியாக எழுந்துள்ளதை நாம் கண்டு கொள்ள முடியும். இத்தகைய சோஷலிச ஆட்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் விதமாக, மாக்ஸிச-லெனினிசப் பாதையில் இட்டுச் செல்வதற்காக ஓர் வாலிபர் அணியை ஆரம்பிப்போம். ஏகாதிபத்திய முதலாளித்துவ சத்துருக்களிடமிருந்து எமது தாயகம், எமது இனம், சமுதாயம், ஆகியவைகளைக் காப்பாற்றி சுதந்திர, சுபீட்சமிக்க தாயகத்தை அமைப்போம். இத்தகைய மாக்ஸிச - லெனினிஸத்துவத்தின் அடிப்படையில் சோஷலிச அமைப்பை ஏற்படுத்துவது தான் எமது ஒரே நோக்மாகும்."

இவ்வாருக 1964 மார்ச் மாதம் 8-ந் திகதி திருகோணமலை சீனன் குடா தேயிலை பரிபாலன மத்தியஸ்தானத் தோழர்களினுல் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்ட சீனன் குடா கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் ஸ்தாபன அமைப்பு அறிக்கையில் காணப்படுகிறது.

இவ்வாலிபர் சங்கத்திற்கு உயிரூட்டி, வழிககட்டிச் செல்ல ஆர்வமிக்க நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது. 18 உறுத்பினர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கத்தின் நிர்வாகிகள் பின்வருமாறு.

அமைப்பாளராகத் திருகோணமலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க உறுப்பினர் தோழர் கே. எச். ஜயதிலகா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்:

தலைவர்: எச். ஏ. அமரசிங்காவும், செயலாளர்; மாபா பிரேமரத்தின, பொருளாளர்: கே. எச். பிரேமதாஸ, தோழர்கள் எம். பியசேன, பி. எல். பிரேமதாஸ, பி. எச். குணபால, கே. எச். ஜயதிலக ஆகியோர் நிர்வாகக் குழு அங்கத்தினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# கம்யூனிஸ்ட்

## கட்சி காரியாலயம்


இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
இலக்கியம், அரசியல் விசாரணைகள்,
மற்றும் கடிதப் போக்குவரத்துக்களை
பின்வரும் முகவரியுடன்
வைத்துக்கொள்ளவும்.

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி**
123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2

★★★★★★★★★★★★★★★★★★★★★★

# போராடும் சங்கம் செங்கொடிச் சங்கம்

## சென் ஜேம்ஸ் தோட்ட வருடாந்தக் கூட்டம்



எம். பி. செல்லையா

பதுளை மாவட்டப் பிரதிநிதி இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்.

"கடந்த காலங்களில் வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தி இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்திற்கு வெற்றி மேல் வெற்றி பெற்றுத்தந்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைக் கோரிக்கைகளை வென்றெடுக்க தனது இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் (செங்கொடிச் சங்கம்) மூலம் போராடும். சென் ஜேம்ஸ் தோட்டத்து மேல் டிவிசன் தொழிலாளர்களாகிய நீங்கள் போராட்ட சரித்திரம் உள்ளவர்கள். 21 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு எத்தகைய போராட்டத்திலும் கலந்துகொள்ள நீங்கள் தயாராய் இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்''. என்று 5-4-64 பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த ஹாலி-எல, சென் ஜேம்ஸ், மேல் டிவிஷன், தோட்டத்தில் தலைவர் தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பதுளை மாவட்டப் பிரதிநிதி தோழர் எம். பி. செல்லையா குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில், இன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது ஐக்கியம். இந்த ஐக்கியத்தைக் கட்டி வளர்க்க செங்கொடிச்சங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்றூர். கடந்த காலங்களில் சென் ஜேம்ஸ் தோட்டத்தில் தீர்க்கப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினூர்.

அடுத்து பதுளை மாவட்டப் உப பிரதிநிதி தோழர் அ. ராமநாதன் பேசுகையில், தோட்டத் தொழிலாளர்கள் இன்றுவரை இனரீதியில் வகுப்புவாத பிற்போக்குவாதிகள் தலைமையில் பிளவுபடுத்தப்பட்டார்கள். இதனுல் மற்றுமுள்ள தொழிலாளர்கள் பெற்ற அடிப்படை மனித உரிமைக் கோரிக்கைகளைக்கூட தோட்டத் தொழிலாளர்கள் பெறமுடியாது போயிற்று. பண்டிகை தினங்கள் கிடையாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு பண்டிகை விடுமுறை தினங்கள் சம்பளத்தோடு கொடுக்கப்படல்வேண்டும் எனச் செங்கொடிச்சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் என். சண்முகதாசன் போராடிய போது, பிற்போக்குத் தலைவர்கள் போராட முன்வரவில்லை. வாய் பேசாத மௌனியாய் இருந்துவிட்டார்கள். ஆனுல் இன்றைய நிலை அப்படியில்லை. தோட்டத் தொழிலாளர்கள் தம்மை உணரஆரம்பித்துவிட்டார்கள். அதன் பிரதிபலிப்பே 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் தொண்டமான்-அஸீஸ் சங்கங்களும் கலந்துகொள்ளுகின்றன என்றூர்.

உபதலைவர் கே. மாணிக்கம் பேசுகையில், செங்கொடிச் சங்கம் சென் ஜேம்ஸ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடிய விதத்தை எடுத்துக் கூறி மேலும் மேலும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பின்னர் புதிய வருட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: தோழர் ஆர்.என். கருப்பண்ணன், உபதலைவர்: தோழர் கே.மாணிக்கம், செயலாளர்: தோழர் டி. ஆறுமுகம், உபசெயலாளர்: தோழர் கே. எஸ். தங்கராஜ், பொக்கிஷதார், கலெக்டர்கள்: தோழர்கள் கே. எம். மைலப்பன், கந்தையா, கமிட்டி அங்கத்தவர்கள்: தோழர்கள் பிச்சைமுத்து, பி. ஆறுமுகம், குழந்தை, படலாண்டி, கந்தன், வி. எம். சின்னையா, கே. ஆர். வேலு தேவர், கே. மறுக்கன், வி. எஸ். செல்லையா. (ந.நி)




## நுவரெலியா சினிமாத் தொழிலாளரின் கோரிக்கைகள் கிடைத்தன

இலங்கை சினிமா பில்ம் ஸ்டுடியோ ஊழியர் சங்கத்தின், நுவரேலியா றிவோலி தியேட்டர் தொழிலாளரின் கோரிக்கைகள் சில நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளன. நிர்வாகத்தின் சார்பில் மானேஜிங் டிரெக்டரான திரு. எஸ். ஏ. காதரும் தொழிலாளர் சார்பில் கிளைத் தலைவர் தோழர் பொன்னையாவும், தாய்ச் சங்கக் காரியதரிசி தோழர் எம்.எம். செனிவிரத்னவும் கலந்துகொண்ட இப்பேச்சுவார்த்தைகளின்படி பின் வருபவை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1. வரவு இடாப்பு வசதியாக வைக்கப்படுதல் வேண்டும்.

2. சகல தொழிலாளர்கட்கும் 8 மணி நேர வேலை. கூடுதல் நேர வேலைக்கு $1\frac{1}{2}$ மடங்கு சம்பளம்.

3. பகிரங்க, வர்த்தக விடுமுறை தினங்கள் வழங்கப்படுதல்,

4. தொழிலாளர்களை அநியாயமாகக் கஷ்டப்படுத்துவதும் பழிவாங்குவதும் உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

## பெருகும் சி.டி.யு.எப். அணி

### அப்போதிக்கரீஸ் தொழிலாளர் மேலும் இணைந்தனர்

கொழும்பு அப்போதிக்கரிஸ் லிமிடெட்டின் கோட்டைக் கடையின் அங்கத்தவர்கள் சென்ற மாதம் 18-ம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தொழிலாளர் தம் உரிமைக்காகத் திறமையாகப் போராடும் சி. டி. யு. எப். தலைமையிலுள்ள இலங்கைப் பொதுத் தொழிலாளர் சங்கத்தில் இணைய முடிவெடுத்துள்ளனர். சி. டி. யு. எப். தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்குத் தோழர் ஏ. ஜயசூரியா தலைமைவகித்தார்.

பின்வருபவர்கள் சங்க உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். சிவலிங்கம், உப-தலைவர்: எல். பியசேன, காரியதரிசி: டி. டபிள்யு. சத்தறசிங்க, உப-காரியதரிசி: எஸ். எம். மாட்டின் சிங்கோ, தனுதிகாரி: எம்.ஜி. பெரேரா, கமிட்டி அங்கத்தவர்கள்: எம். அல்பர்ட் பர்ணுந்து, எம். ஆர். ஏ. சிறிசேன, எச். வி. பெரேரா, கே. டி. அரன் சிங்கோ.

கொழும்பு அப்போதிக்கரிஸ் லிமிடெட் அச்சகப் பகுதி, தையல் பகுதித் தொழிலாளர்கள் அனைவரும் சி. டி. யு. எப்.புடன் இணைந்துள்ளனர் என்பதும், முன்னர் இவை சமசமாஜத் தலைமையில் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந. நி.)

## கொழும்பு வாலிபர் உதைபந்தாட்டப் போட்டி

கொழும்பு மாவட்டத்தைச் சார்ந்த பத்தொன்பது வயதுக்குட்பட்ட வாலிபர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை கொழும்பு வாலிபர் உதைபந்தாட்ட லீக்கினுல் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

பத்தொன்பது விளையாட்டுச் சங்கங்கள் பங்குபற்றும் இச் சுற்றுப்போட்டியின் ஆரம்ப விழா வைபவத்தை மே இறுதியில் விமரிசையாக கொழும்பு நகரசபை (ஸ்டேடியம்) அரங்கில் நடத்துவதென்றும், இவ்விழாவைபவத்துக்கு பிரதான அதிதியாக மக்கள் கொரியா ஸ்தானிகரை வரவழைப்பதென்றும், தீர்மானிக்கப்பட்டது.

அழுத்கடையுனெடெட் விளையாட்டுச் சங்கம், கொள்ளுப்பிட்டி ரேஞ்சர்ஸ் விளையாட்டுச் சங்கம். பிளேமிங் விளையாட்டுச் சங்கம், எரோஸ் வேல்ஸ் ரேஞ்சர்ஸ் விளையாட்டுச் சங்கம், பிளக் டைகர்ஸ் விளையாட்டுச் சங்கம், சென்ற் செபஸ்தியன் விளையாட்டுச் சங்கம், சந்திரசேன விளையாட்டுச் சங்கம்' ஜொலி பிரதர்ஸ் விளையாட்டுச் சங்கம், யங் ஏன்ஸ் விளைடுச் சங்கம், ஜிந்துப்பிட்டியா லக்கி ஸ்டார் விளையாட்டுச் சங்கம், கொச்சிக்கடை யுனெடெட் விளையாட்டுச் சங்கம், இலவன் டைகர்ஸ் விளையாட்டுச் சங்கம், டெமட்டக்கொடை குரேட்டஸ் விளையாட்டுச் சங்கம், கெமுனு விளையாட்டுச் சங்கம், வும்மன் ஹீல் விளையாட்டுச் சங்கம், யங் அழுத்கடை விளையாட்டுச் சங்கம், மேபீல்ட் விளையாட்டுச் சங்கம், பிளக் பந்தர்ஸ் விளையாட்டுச் சங்கம், ரேடியன்ஸ்டார் விளையாட்டுச் சங்கம் ஆகியவை இப் போட்டியில் கலந்து கொள்கின்ன.

## புரோடித் தொழிலாளரின் வெற்றிகள்

இலங்கைப் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் புரோடிஅன்ட் கம்பெனி லிமிடெட் தொழிலாளர்கள் அண்மையில் தொழில் இலாகா அளித்ததோர் தீர்ப்பின்படி பெரும் வெற்றிகள் ஈட்டியுள்ளனர். அவையாவன:—

1. ஒவ்வொரு தொழிலாளிக்கும்வருடத்திற்குஇருசெட் யூனிபோம்.

2. சகல தொழிலாளர்கட்கும் ரூபா 5/- கூடுதல் அலவன்ஸ்.

3. 4 தற்காலிக தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

கூடுதல் அலவன்ஸ் ரூபா 5/- சம்பந்தமாக 1958 செப்டம்பர் தொடங்கி 1963 ஒக்டோபர் வரையுள்ள பாக்கியும் வழங்கப்படுதல் வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் சார்பில் கிளைச் சங்கத் தலைவர்: ஆர். என், எக்மன், காரியதரிசி: கே. கே. பர்ணுந்து, தாய்ச் சங்க பொதுக் காரியதரிசி: எம். எம். செனிவிரத்ன ஆகியவர்கள் கலந்துகொண்டு வாதித்தனர்.

(ந. நி.)

## ஹோட்டல் தொழிலாளர் கோரிக்கைகள்

ஹோட்டல் குடிவகைத் தொழிலாளர் சங்கத்தின் மெற்ரோபோல் ஹோட்டல் கிளையின் பொதுக் கூட்டம் 28-4-64-ல் நடைபெற்றது, அப்பொழுது பின்வரும் கோரிக்கைகளை நிர்வாகத்துக்கு முன் வைப்பதென த் தீர்மானிக்கப்பட்டது

1. பகிரங்க விடுமுறை தினங்களில் வேலை செய்வதற்கு ஒன்றரை விகிகம் சம்பளம் கொடுத்தல் வேண்டும்.

2. சகல தொழிலாளர்கட்கும் வருடாந்த சம்பள உயர்வு வழங்குதல் வேண்டும்.

3. 14 நாட்கள் வருடாந்த லீவு வழங்குதல் வேண்டும். நான்கு ஆண்டுகளுக்கு இதற்கான பாக்கிச் சம்பளத்தையும் கொடுத்தல் வேண்டும்.

ஹோட்டல் கிளையின் தலைவரான தோழர் வீ. எப்.ஜே. றொட்ரிகோ தலைமை வகித்த இக் கூட்டத்தில் தாய்ச் சங்கப் பொதுக் காரியதரிசி தோழர் எம். எம். செனிவிரத்ன உரைநிகழ்த்தினூர் (ந.நி

## கூடுதல் விடுமுறை

ஐஸ் குளிர்பான உற்பத்தி தொழில் சம்பள சபை 1964 மே மாதம் 26-ம் திகதியை வெசாக் தினத்திற்காக கூடுதலான சம்பளத்துடன் கூடிய விடுமுறைதினமாகவும் 1964 ஜூன் 24-ம் திகதியை போசன் பூரணை தினத்திற்காகச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினமாகவும் ஏற்றுக் கொண்டுள்ளது. தற்பொழுதுசம்பளத்துடன் கூடிய 7 பகிரங்க விடுமுறைத் தினங்களே இத் தொழிலாளர்கட்கு அளிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் விடுமுறைத் தினங்களுக்கான பிரேரணையை, ஐஸ் குளிர்பான உற்பத்தி தொழில் சம்பள சபையில் சி.டி.யூ. எப். பிரதிநிதியான தோழர் கே. குலவீரசிங்கம் சமர்ப்பித்தார். மற்றைய சம்பள சபைகளிலுள்ள சி.டி.யூ.எப். பிரதிநிதிகள் இதே போன்ற பிரேரணைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு

# கேரள மாநிலத்தில் பெரு வரவேற்பு

## திரிபுவாதிகளை எதிர்த்து மக்கள் பேரெழுச்சி

## தோழர் நம்பூதிரியின் பத்திரிகைப் பேட்டி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இணையற்ற தலைவர்களாகிய தோழர்கள் ஏ. கே. கோபாலனும், ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடும் சென்றவாரம் கேரளம் பூராவும் சென்று தமக்கும், இந்தியக் கம்யூனிட் கட்சியின் திரிபுவாதத் தலைவர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளைக் கட்சித் தோழர்களுக்கும், அரசியல் உணர்வுள்ள பொதுமக்களுக்கும் விளக்கினர். இப் பிரயாணத்தின் பொழுது அவர்களைக் கம்யூனிஸ்ட்டுக்கள் மட்டுமல்லாது பொதுமக்களும் பெரிதும் வரவேற்று உபசாரம் செய்தனர். பல மாவட்டங்களிலும் வரவேற்புகளைக் கட்சியின் மாவட்டக் கவுன்சில்களும் தாலுக்கா கவுன்சில்களும் ஒழுங்குபடுத்தின. இவ் வரவேற்பு வைபவங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து திரிபுவாதிகளுக்கெதிரான போராட்டத்திற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துக் கட்சியின் திரிபுவாதத் தலைமையைக் கண்டித்துள்ளனர். பல மக்கள் ஸ்தாபனங்கள் தோழர்கள் கோபாலனையும், நம்பூதிரியையும் வரவேற்கவும் வீதிகள் ஒழுங்கைகள் வழியாக ஊர்வலத்தில் எடுத்துச்செல்லவும் போட்டா போட்டியிட்டன. குவியல் குவியலாக இவர்களின் கழுத்தில் மலர் மாலைகள் போடப்பட்டன. அதுமட்டுமல்லாது ரூபா நோட்டு மாலைகளும் போட்டு மகிழ்ந்தனர்.

இப் பிரயாண முடிவில் பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் தோழர் நம்பூதிரிபாட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவுக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சிதான் காரணமென்ற அவதூற்றுக்கு ஆணி அறைந்தாற்போல் பதில் அளித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தலைமையின் தவறான நடவடிக்கைகளே அதற்குக் காரணம் என விளக்கிக் கூறினார். அவர் மேலும், போட்டிக் கட்சி அமைத்துப் பிளவு நடவடிக்கைகளில் ஈடுபடுவது மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்டுகளாகிய நாம் அல்ல, திரிபுவாதத் தலைமைதான் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது எனக் கூறினார்.

திரிபுவாதிகள் தமக்குப் பெரும்பான்மை இல்லாத இடங்களில் தாம் விரும்பியவாறு கமிட்டிகளைக் கலைத்து, தமது ஆட்களுடன் புதிய கமிட்டிகளை அமைக்கின்றனர். கேரளத்தில் திரிபுவாதத்தை எதிர்த்த ஒரே காரணத்துக்காக சில மாவட்டக் கவுன்சில்களைத் திரிபுவாதத் தலைமை கலைத்துள்ளது. திரிபுவாதத் தலைமையின் கொள்கை இதுவானால் கட்சியில் ஐக்கியம் முடியாததொன்று என அவர் கூறினார்.

அவர்கள் ஐக்கியம் விரும்புபவர்களானால் எல்லா மாவட்டங்களிலும் உள்ள தோழர்கள் மீதும் திணிக்கப்பட்ட மறியல் (சஸ்பென்சன்) வாபஸ் பெறப்படல் வேண்டும். இரு பகுதியினரும் தமது கருத்தை முன்வைக்கக்கூடிய மாநில மாநாடு உடனடியாகக் கூட்டப்படல் வேண்டும். மாநாட்டு முடிவுகளின்படி தாமும் தமது தோழர்களும் நிற்கத் தயாரெனக் கூறிய தோழர் நம்பூதிரி அதைச் செய்ய முடியுமாவெனத் திரிபுவாதத் தலைவர்களுக்குச் சவால் விடுத்தார். கட்சித் தோழர்களின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் ஐக்கியத்தைப்பற்றிப் பேசுவது அர்த்தமற்றது என அவர் கூறினார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூண்டுதலில்தான் தோழர்கள் கோபாலனும், நம்பூதிரியும் பிளவு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்ற புதிய அவதூற்றை தோழர் நம்பூதிரி மறுத்துரைத்தார். சீனத்தை ஆக்கிரமிப்பாளர் என்று பட்டஞ்சூட்டிய 1962 நவம்பர் தேசிய கவுன்சில் தீர்மானத்தை நம்பூதிரி எதிர்த்ததை அவ் அவதூறுக்கு ஆதரவாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். தேசிய கவுன்சிலின் இத்தீர்மானத்தையொட்டி தமக்குப் பல கருத்து வேற்றுமைகள் உண்டென்பதைத் தோழர் நம்பூதிரி ஏற்றுக்கொண்டார். (இத்தீர்மானத்திற்கு அவர் அன்று வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது) அவரின் கருத்துவேற்றுமைகளாவன:-

(1) மேற்கத்தைய இராணுவ உதவியை வரவேற்பதை அவர் எதிர்த்தார்.

(2) மற்றவர்களைப் போலவே சீனத்துடன் பேச்சுவார்த்தைகளை அவர் விரும்பினார். ஆனால் செப்டம்பர் 8 வரையறையை வலியுறுத்துதல் கூடாதெனக் கருதினார்.

(3) சீனத்தை ஆக்கிரமிப்பாளர் என முத்திரை குத்தி, இந்தியாவில் சீன-எதிர்ப்புப் பிரச்சாரத்தைக் கட்டி எழுப்புவதை அவர் எதிர்த்தார்.

ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட கட்சித் தோழர்களும் 9 மாவட்ட கவுன்சில்களில் 6 மாவட்டக் கவுன்சில்களும் திரிபுவாதத்தை எதிர்த்த போராட்டத்திலும், டாங்கே கும்பலின் காட்டிக்கொடுப்பை எதிர்த்த போராட்டத்திலும் தோழர்கள் கோபாலனுக்கும் நம்பூதிரிக்கும் பின்னால் நிற்கின்றனர் என்று தோழர் நம்பூதிரி பேட்டி முடிவில் கூறினார்.

(நமது விசேஷ
இந்திய நிருபர்)

● 5-ம் பக்கத் தொடர்

தொழிலாளி வர்க்கமும் ஸ்தாபன ரீதியாகத் திரண்ட தொழிற்சங்க இயக்கமும் இந் நிலைமையைச் சகித்துக் கொண்டிருத்தல் முடியாது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி பணிந்து போவதற்கு அவர்கள் ஆதரவளிக்க முடியாது. 21 கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு மேலும் தாமத மேற்படுவதையும் அவர்கள் சகிக்க முடியாது. இடதுசாரி இயக்கத்தைத் தொழிலாள வர்க்க விரோத ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குக் காட்டிக் கொடுப்பதை எதிர்த்துப் போரிட நாம் இம் மேதினத்தில் உறுதிபூணுவோம். 21 கோரிக்கைகளை உடனடியாக சமர்ப்பிப்பதற்காகவும் அவற்றினை வென்றெடுப்பதற்காகவும், அவற்றினை வென்றெடுப்பதற்கான உடனடிப் போராட்டத்திற்காகவும் நாம் போரிடுதல் வேண்டும்.

தொழிற்சங்க இயக்கத்தின் ஐக்கியத்தை நாம் மேலும் பலப்படுத்துதல் வேண்டும். சி. டி. யூ. எப் பைச் சீர்குலைக்க மெண்டிஸ்-கெனமன் கும்பல் எடுத்த முயற்சிகள் கண்டிக்கத் தக்கவை. சி. டி. யூ. எப் இப் போராட்டத்தில் வெற்றிகரமாக முன் வந்துள்ளது. இலங்கையில் தனியொரு தொழிற்சங்க மத்தியஸ்தானம் ஸ்தாபிக்க தாமதமின்றி நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலும் சகல முற்போக்கு பகுதிகளினதும் ஐக்கியத்தின் அடிப்படையில் அமைந்த அரசாங்கத்தினால்தான் இன்றைய நெருக்கடிக்குத் தீர்வுகாண முடியும். வெகுஜனங்களின் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளித்து, அவர்களின் போராட்டங்களுக்குச் சரியான தலைமை அளிப்பதன் மூலமே அத்தகைய அரசாங்கத்தை அமைக்க முடியும். இதனைச் சாதனையிலாக்க இன்று இடதுசாரி இயக்கத்தினுள்ளே ஊடுருவிய திரிபுவாத சீர்திருத்தவாதக் கருத்துக்களை எதிர்த்துப் போராடி அவற்றினை நாம் தோற்கடித்தல் வேண்டும்.

# ஒன்னும்புரியல்லேபாட்டா!

பாட்டா! பாட்டா!! சொல்லு பாட்டா, பூட்டானிலே நடந்ததை.

பூட்டான் சேதி இருக்கட்டும்டா. நாட்டுலே கோட்டாங்க ஆட்டம் போருடுங்களே. அதைப்பற்றிக் கேளுடா கண்ணே.

அட, என்னெம் போட்ட கிரிக்கெட் ஆட்டத்தைச் சொல்லுறியா.

போடா போ, அதுவும் தான்டா, இன்னும் எத்தனையோ பித்தலாட்டங்கள், மந்திரிப் பதவி நோட்டங்கள் கட்சிகளுக்கே காணும் ஆட்டங்கள், சதிகார திட்டங்கள்......

ஆமா பாட்டா, இது தானிப்ப சந்தியிலே கூட்டங் கூட்டமா கதைக்கிறகதையாச்சே! ஏன் பாட்டா இந்த என்னெம்முக்கு கடைசி நேரத்திலே இந்தப் பித்தலாட்டம். வயதுக் கலாட்டாவா அல்லது அடக்கி வைத்த சொந்தப் புத்தி வெளி வந்துவிட்டதா!

அது வென்னமோ தெரியல்லையடா. பாக்டரி பாக்டரியாய்ப் போய் உசார்ப்படுத்துற நேரத்திலே இந்த மனுஷன் சீலைக்குப் பின்னாலே பதுங்கப் பார்க்கிருங்க, அது மட்டுமாடா ஆண்டு ஆண்டாகக் கட்டி வளர்த்த லெப்டிஸ்ற் இயக்கத்தை டப்பென்று உடைத்திட்டாங்க இந்த என்னெம்மும் பீட்டர் பிலிப்புக் கூட்டமும்.

ஆமாம் பாட்டா அதுவும் கதைச்சாங்க. பிலிப்பு எப்போதும் சாம்பார்ப் பருப்புத் தானும் ஆனால் இந்தப் பீட்டர்தான்......

பீட்டருக்குப் பட்டர் போட்டாங்க அப்பிடியே உருகியிட்டாரு. இப்ப பீட்டர் மக்களுக்குப் பட்டர் போடப் பார்க்கிருரு......பாட்டாளி பாட்டாளி யென்று ரேட்டு ரேட்டாக கூட்டம் போட்டு, பண்டான்டை பாட்டி உதவாக்கரைப் பாட்டி, மிலிட்டெறியைவிட்டு அடக்கிற பாட்டி என்னுட்டு இப்ப அந்தப் பாட்டிக்கே அடி வருடப் போயிட்டாங்களே ...கூட்டாளியாய்ப் போயிட்டாங்களே. இதை நினைக்க வயிறு பற்றி எரியுதடா கண்ணே.

ஏன் பாட்டா? என்னெம்முக்கும் பிலிப்புக்கும்தான் மந்திரிப்பதவியாமே. பீட்டருக்கும் ஏதாவது சில்லறை...............

யாருக்குத் தெரியும்டா

பாட்டா பாட்டா! இவங்க சொல்லுருங்களே இப்பத்தை மந்திரிகளுக்குள்ளே சி. பி. மைத்திரிபாலாவை விட மற்றெல்லாரும் முற்போக்காளர்களென்று அது எப்படி பாட்டா.

அட, நீ சின்னப் பயல் தான்டா, ஆனல் ஒனக்குள்ள புத்திகூட அவங்களுக்கில்லையே. கண்டபடி ஏதேதோடுப் படிக்கிருங்க. டிப்டொப் பாக் கதை யளக்கிருங்க. மக்களை ஏமாத்திக்கிட்டே ஏமாந்து போருங்க.

ஆமா பாட்டா, நீ தான் சொல்லுவியே நம்பினவனை ஏமாற்றுறவங்க வாழ மாட்டாங்களென்னு......இவங்களை எவ்வளவு பேர் நம்பியிருந்தாங்க. அதுக்குப் போராட்டம், இதுக்குப்போராட்டம் லெப்டிஸ்ட் எல்லாம் ஒன்று கூடி இருபத்தொரு டிமான்ஸ் போராட்டம் என்றெல்லாம் கத்திக் கத்தி நம்பப் பண்ணிட்டு கடைசியிலே காலை வாரி விட்டாங்களே. இவங்க வாழுவாங்களா?

நிச்சயமா வாழு வாங்கடா. ஆனல் ஏமாளிகளாய், துரோகிகளாய், காட்டிக் கொடுத்த ஊதாரிகளாய், எச்சிலை ரசித்து......

அதுவரை பாட்டாளி சும்மா விட்டுடப் போருங்களா. கொதித்தெழுந்து குதிக்க மாட்டாங்களா? எதுக்கும் இருந்து தான் பார்ப்பமே. நான் வாறேன் பாட்டா. ரேட்டுக்குப் போனல் கூட்டம் கூட்டமாப் பேசுவாங்க. இந்தக் கும்பலைப் பற்றி கொற் கொற் நியூஸ் தருவாங்க. இப்பதான் எனக்கு ஸ்கூல் லீவாச்சே.

—''சார்லி''

## தொழிலாளி அன்பர்கள் கவனத்திற்கு

தொழிலாளி பத்திரிகைக்கு கட்டுரைகள், கவிதைகள், செய்திகள் எழுதி அனுப்பும் தோழர்களைத் தெளிவாகவும், சுருக்கமாகவும், பேப்பரில் ஒரு பக்கத்திலும் எழுதுமாறு தோழமையுடன் வேண்டுகின்றோம்.

பத்திரிகைக்கு விஷயதானம்
ஆசிரியர்
தொழிலாளி
9, டிமெல் வீதி,
கொழும்பு-2
என்று அனுப்பப்படல் வேண்டும்.

பத்திரிகை சம்பந்தமான பணம், பத்திரிகை விற்பனவு முதலிய நிர்வாக விஷயங்களை
மானேஜர்
தொழிலாளி
123, யூனியன் பிளேஸ்
கொழும்பு.2
என்று எழுதுதல் வேண்டும்.

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது:தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2.